ஒரு பேப்பர்
ORU PAPER

Paper - 01 Issue - 01 18 Friday June 2004 விற்பனைக்கல்ல

வெல்லுங்கள்!!
இலங்கை சென்று வர விமான பயண சீட்டு

For details contact our customer FREE Service 0800 989 0000
A9.
International Calling Cards

கருணாவுடன் நேர்காணல் பக் 28
Excuse me நீங்கள் தமிழா? பக் 20
What a way to earn US$ 4.5 billion! pg 6

SARASHWATHY BAVAN
Pure vegetarian Restaurant

we caters for all your holy events
020 8902 1515
549 High Road, Wembley

Unisun Travel
உங்களின் அனைத்து விமானப்பயணத் தேவைகளுக்கும் உடன் அழையுங்கள்
020 8664 8811

கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்
* நகைமாற்று
* புது புது design
* for orders
இன்னும் வசதிகள் உண்டு
020 8900 9009
Unit 8-9, 190 Ealing Road Wembley
அல்பேட்டன் VP&SON க்கு அருகாமையில்

SPICELAND
New Srilankan and South Indian Restaurant
For your Weddings, Brithdays or any other ceremonies, call us to make your day 'cool' and satisfactory with out variety of food.
020 8667 1700
212 London Road Croydon

MITHUS
jewellery
020 8683 1792
322-324 London Road, Croydon

020 8767 5333
DIAMONDS PALACE
76 Tooting High Street, London

TASTY LAND
சுவையும் தரமும் மிக்க இலங்கை, இந்திய உணவுகளை இதமாக உண்பதற்கு இன்றே நாடுங்கள்
Tasty Land Indian Srilankan Cousin
243 Ealing Rd Wembley
020 8903 8777

THARANI
JEWELLERY
பாரம்பரிய நகைகளா?
அசத்திடும் நவீன ரக டிசைன்களா?
உங்கள் விருப்பம்,தேவை...
அனைத்தும் செயல் வடிவில்!

Beauty is Truth
020 8902 7111
94 Ealing Road, Wembley

RICE and SPICE
Srilankan - South Indian Tandoori Restaurant & Take Away

215 Bromley Road Catford SE6 2PG
Tel: 020 8698 9990
Open: 6.00 to 11.00 pm Closed on Mondays

Financial Services Ltd

Total, Trusted Mortgage Solutions...

Are you having problems in getting a Mortgage?

* Can't get the right Mortgage?
* No proof of income
* Difficult credit history?
  (CCJ's, Defaults, Mortgage Arrears...)
* Self-employed, no accounts
* Need to raise funds for business?
* Trying to bring all your financial commitments under one payment?

Whatever the problem, one call to

GL Financial Services

Will heal your financial headache

We Specialise in arranging

* Mortgage for 1st Time Buyers
* Buy-to-Let Mortgages
* Remortgages
* Rights to buy Mortgages
* Commercial Mortgages
* Commercial loans

Life Assurance, Building & Contents insurance

உங்கள் மனதிற்கு விருப்பமான வீட்டை வாங்குவதில்
பிரச்சினையா?

Mortgage எடுக்க கஷ்டமாய் உள்ளதா?
வீண் கவலை வேண்டாம்...

மிகக் குறைந்த வட்டி வீதத்துடன் மிகக் குறைந்த
முன் பணத்துடன் (3% onwards) மிகக் குறைந்த காலத்தில்
செய்து தரக்காத்திருக்கிறோம்.

உங்களின் Credit Problems கவனத்திற்கொள்ளப்பட்டு
தகுந்தமுறையில் Mortgage செய்து தரப்படும்

வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்குவதற்கு கடன் வசதிகள்
மிகச்சிறப்பான முறையில் ஒழுங்கு செய்து தரப்படும்.

Call us now :

020 8672 2333

239 Mitcham Road, Tooting
SW17 9JG

Your home at risk if you do not keep up repayments on mortgages or other loans secures on it

GLOBAL

Estates

Porperties available around

* Tooting
* Colliers Wood
* Streatham
* Clapham
* Mitcham
* Balham
* Morden
* Wimbledon

LANDLORDS

We urgently require properties in all areas, for our registred tenants.

TENANTS

Looking for a house or flat to rent?

We have One Bedroom, Two Bedroom, Three Bedroom , Four Bedroom

We Provide

* Professional Tenants
* Rent Collection
* Regular Checking
* Insurance Arranged
* Inventory
* Accompanied Viewing
* Maintenance and Repair
* Comprehensive Referencing

We specialise in Selling/Letting properties and have proved our services by selling properties around Tooting, Mitcham, Collierswood, Morden, Wimbledon, Streatham
We urgently require two to four bedroom properties around your area for keen buyers registred with us.

Our charges are only 1.0%+VAT
on No Sale No fee Basis

Call us now :

020 8682 5100

233 Mitcham Road, Tooting
SW17 9JG

BBC's GEORGE ALAGIAH VISITS SRI LANKA

BBC newsreader George Alagiah, who many readers might not know is a Sri Lankan born Tamil visited the country of his birth after 30 years last year. On a visit to the plantation areas in the central hilly regions of Sri Lanka he saw for himself how work supported by Christian Aid has helped transform people's lives.

George Alagiah was born at Kalmunai in the eastern province and emigrated at a young age with his parents to Uganda in Africa where his father, a waterworks engineer earned a contract. Their departure from Ceylon (as the country was then known) came in the wake of the island-wide riots against Tamils in the year 1958 when hundreds of Tamils were brutally killed by Sinhalese mobs. Alagiah's father felt there was no future for Tamils in the country, and took his family away to Africa.

Picture shows Alagiah with Engel Selvi, a tea plucker and head of a women's group at the Eyerie estate, a tea plantation just over an hour's drive from Kandy. He went there with a team from the Institute for Social Development (ISD), one of Christian Aid's partners in the country. With the help of the ISD team, Engel Selvi's women's group holds literacy classes and has begun to tackle the domestic violence that blights many families "I've nothing but admiration for what people like Engel Selvi achieve...she is a shining exampole of the power of the human spirit", says Alagiah.



George Alagiah pictured with Engel Selvi in the hill country

Photo: Christian Aid / Jenny Matthews

அமெரிக்காவில் வைகோ

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலர் திரு. வைகோ தற்போது அமெரிக்கா சென்றுள்ளார். தனது 11 மாதப் பேரக் குழந்தையை அதன் தாயாரிடம் ஒப்படைப்பதற்காகவே சென்னை உயர் நீதி மன்ற அனுமதி பெற்று சென்றுள்ளார்.

இதே அமெரிக்காவில் நடந்த அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை மாநாட்டில் கலந்து விட்டு நாடு திரும்பிய போதுதான் பொடா சட்டத்தின் கீழ் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து 2002 யூலை 11 இல் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. பொடாச் சட்டம் எல்லை கடந்த பயங்கரவாதத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படும் அது அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தப்பட மாட்டாது என எல்.கே. அத்வானி போன்றோர் கொடுத்த உறுதிமொழியை நம்பியே பொடாச் சட்டத்துக்கு ஆதரவாக வைகோ நாடாளுமன்றத்தில் வாக்களித்தார். ஆனால் அந்தச் சட்டத்தை அரசியல் பழிவாங்கும் நோக்கோடு தமிழக முதல்வர் ஜெயலலிதா வைகோ மீது ஏவி விட்டபோது பாஜக தலைவர்கள் அதனை ஏறக் குறைய கண்டு கொள்ளாதவாறு நடந்து கொண்டனர். வைகோ சிறையில் இருந்தபோது எந்தச் சிறப்பு வசதிகளையும் பெற்றுக் கொள்ளாது ஏனைய கைதிகளுக்குக் கொடுக்கப்பட்ட உணவையே உட்கொண்டார். சிறை அதிகாரிகள் கொடுத்த மின்விசிறியை வாங்க மறுத்தார்.

இடையில் இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் அறிவிக்கப்பட்டது. பிணையில் வெளிவருவதில்லை என்ற தனது முடிவை மாற்றி பிணை மனுச் செய்து 575 நாள் சிறைவாசத்தின் பின்னர் வைகோ பெப்ரவரி 7 ஆம் நாள் வெளியில் வந்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் சனநாயக முற்போக்குக் கூட்டணி பெற்ற மாபெரும் வெற்றிக்கு வைகோவின் நாடு தழுவிய பரப்புரை பெரும் பங்கு வகித்தது. மொத்தம் 40 தொகுதிகளிலும் 49,000 கிமீ இடைவிடாது பயணம் செய்து ஜெயலலிதாவின் வல்லாட்சிக்கு எதிராக வாக்களிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அன்றும் இன்றும் என்றும் வி.டிலிகளுக்கு தார்மீக ஆதரவு அளித்து ஐரும் வைகோவிற்கு அளிக்கப்படும் வரவேற்பில் பெரும் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் உணர்வாளர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Portland
Estate Agents (UK) Ltd
Sales & Lettings

9, St. James Road
Croydon
Surrey CRO 2SB

Tel : 020 8683 1313
Fax: 020 8684 0444

Mortgage
Re-Mortgage
Business Lands for Shops
Petrol Stations
Hotel
Mortgages for European Residents

பிரித்தானிய செய்திகள்

ஐரோப்பிய பாராளுமன்ற தேர்தல்: இணைப்புக்கு எதிர்ப்பு அதிகரிக்கின்றது

நடந்து முடிந்த ஐரோப்பிய பாரளுமன்ற தேர்தல் முடிவுகளின் படி, ஐக்கிய இராச்சியத்தில், ஐரோப்பிய இணைப்புக்கான எதிர்ப்பு அதிகரித்து வருவது வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்துள்ளது.

இணைப்புக்கு ஆதரவான தொழில் கட்சியின் தோல்வியும், அண்மைக் காலம் வரை வெறும் தொலைக்காட்சி நிகழ்ச்சி வழங்குனராகவே அறியப்பட்டுவந்த றொபர்ட் கில்றோய்-சில்க் இணைந்து கொண்டுள்ள சுதந்திர ஐக்கிய இராச்சியம் கட்சியின் வெற்றியும் இவ் எதிர்ப்புணர்வை கோடிட்டு காட்டி நிற்கின்றன.

சுதந்திர ஐக்கிய இராச்சியம் கட்சி ஐரோப்பிய இணைவுக்கான தனது எதிர்ப்பை ஒரே கொள்கையாக தேர்தலில் முன்வைத்து நாடெங்கிலும் 16 விழுக்காடு வாக்குகளை பெற்று ஐரோப்பிய பாராளுமன்றில் 12 ஆசனங்களை தனதாக்கி கொண்டுள்ளது. இது கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளை காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமானது.

ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டபின் செய்தியாளர்களுடன் பேசிய கில்றோய், 'உடைத்தெறிவோம்' பிரசாரங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் வீண் விரையங்களையும், ஊழல்களையும், எமது நாட்டின் இறையாண்மை சிதைந்து கொண்டிருப்பதையும் மக்கள் முன் வெளிக்கொணருவோம் என்றார்.

இந்நிலையில் பழமைவாத (கொன்சவேர்ட்டிவ்) கட்சியில் ஏற்கனவே, ஐரோப்பிய இணைவுக்கெதிரான கருத்துக்கொண்ட கடும் போக்காளர்களின் செல்வாக்கு அதிகரிக்கலாம் என கருதப்படுகிறது. பிரித்தானியா ஐரோப்பிய பொது நாணயம் ஈரோவுக்கு மாறுவதும் இதனால் பின்தள்ளப்படலாம்.

முஸ்லீம் பாடசாலை மாணவியின் மனு நிராகரிப்பு

பாடசாலைக்கு தன்னை பாரம்பரிய முழு நீள உடை அணிய அனுமதிக்குமாறு கோரி 15 வயது முஸ்லீம் மாணவியொருவர் தொடுத்திருந்த வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

லூட்டனிலுள்ள டென்பிக் அரச பாடசாலையில் கல்விகற்று வந்த சபீனா பேகம் என்ற முஸ்லீம் மாணவி இவ்வாறு உடையணிய பாடசாலை நிர்வாகம் அனுமதிக்காமையால் 2002ம் ஆண்டு செப்ரெம்பர் முதல் பாடசாலைக்கு செல்லாதிருக்கின்றார்.

ஏறத்தாழ 1000 பிள்ளைகள் கல்வி பயிலும் இந்த பாடசாலையில் 80 சதத்துக்கு மேற்பட்டோர் முஸ்லிம்கள். ஏற்கனவே சல்வார்-கமீஸ் ரகத்தை சேர்ந்த இஸ்லாமிய உடையணிய மாணவிகள் அனுமதிக்கப்பட்டுள்ள போதும், மதத்தில் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டின் காரணமாக சபீனா இவ் உடையணிய விரும்பியதாக தெரியவருகிறது.

தனது மத சுதந்திரமும், கல்விகற்பதற்கான சுதந்திரமும் மறுக்கப்பட்டுள்ளதாக சபீனா நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பிரான்சில் அண்மையில் கொண்டுவரப்பட்ட பாடசாலை மாணவ-மாணவிகள் தலையங்கிபிணிவதை தடை செய்யும் சட்டம், இவ்வழக்கின்பால் பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

வழக்கினை விசாரித்த நீதிபதி பென்னட் இப்பாடசாலையின் சீருடை கொள்கை, பல்லின மாணவருக்கு ஏற்ற தாகவுள்ளதாகவும், இவ்விடயத்தில் மனிதவுரிமை மீறல்கள் எதுவும் இடம்பெறவில்லை எனக்கூறி மனுவை நிராகரித்துள்ளார்.

இத்தீர்ப்பினை தொடர்ந்து, சபீனாவுக்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணி கருத்து தெரிவிக்கையில், இத்தீர்ப்பு சபீனாவையும் அவரது குடும்பத்தையும் பெரு வருத்தத்துக்கு உள்ளாக்கியுள்ளதாகவும், அவள் மீள டென்பிக் பாடசாலைக்கு செல்லப்போவதில்லை எனவும் அறிவித்துள்ளார்.

வீட்டு விலையில் சரிவு ஏற்படலாம்

தொடார்ச்சியாக அதிகரித்து வருகின்ற வீட்டு விலையில் பெரும் சரிவு ஏற்படலாமென இங்கிலாந்து மத்திய வங்கியின் (Bank of England) ஆளுனர் மேர்வின் கிங் எச்சரித்துள்ளார். வங்கியினால் 4.5 சதவிதத்துக்கு வட்டி வீதம் அதிகரிக்கப்பட்ட சில தினங்களிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கும் கிங், தற்போதய வீட்டு விலைகள் நீண்ட காலத்துக்கு தாக்குபிடிக்க முடியாதளவுக்கு அதிகமாகவுள்ளதாவும் கூறியுள்ளார். வட்டி வீதம் மேலும் அதிகரிக்கபட வாய்ப்புள்ளதாக எதிர்வு கூறியுள்ளதோடு, இது மக்களின் நுகர்ச்சித்திறனை மட்டுமல்லாமல், முழு நாட்டின் பொருளாதாரத்தையுமே பாதிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை வீட்டு விலைகளில் சரிவு தென்படாவிட்டாலும், கடந்த ஆறு மாத காலத்தில் முதல்தடவையாக அதிகரிப்பு வீதம் குறைந்துள்ளதாக பட்டயம் பெற்ற அளவையாளர் சங்கத்தினரின் (Royal Institution of Chartered Surveyors) மாதாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுனரின் கருத்துத்தொடர்பாக, தனது கருத்தைத் தெரிவித்த பிரட்போட் பிங்லி (Bradford & Bingley) வீட்டுமுகவர் நிறுவனத்தின் இயக்குனர் கரி வெரிட்டி, இந்த அறிவிப்புக் கண்டு யாரும் பீதிகொள்ளத் தேவையில்லை, தற்போது வீட்டு விலைகள் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளதாகவும், வீடுகட்கு தட்டுப்பாடு நிலவும் இடங்களில் தொடர்ந்தும் விலையதிகரிப்பு ஏற்பட இடமுண்டு என்று கூறியுள்ளார்.

இதே கருத்தையே தெரிவித்துள்ள, வுலிச் - பார்கிளேஸ் (Woolwich & Barclays) ஆகியவற்றின் ஈட்டுப்பிரிவின் தலைவர் அன்டி கிரே, வீடு வாங்குவோரின் நம்பிக்கை இன்னமும் தளராது உறுதியாகவிருப்பதாகவும், வட்டி வீதம் மேலும் அதிகரிக்கப்பட்டால், வீட்டு விலை அதிகரிப்பின்றி ஸ்திரத்தன்மையடையும் என்றும் எதிர்வு கூறியுள்ளார்.

பண மோசடி வழக்கில் ஜோதிக்கு 7 வருட சிறை

தனது மேலதிகாரிகளின் வங்கி கணக்குகளிலிருந்து 4 மில்லியன் பவுண்ட்ஸ் மோசடி செய்ததாக குற்றம்சாட்டப்பட்ட ஜோதி டிலோரி என்ற ஆசியப் பெண், கோல்ட்மன் சாச்ஸ் முதலீட்டு வங்கியில் தனிப்பட்ட செயலாளராக பணிபுரிந்தவர்.

2001-2002 காலப்பகுதியில் போலி கையெழுத்திட்டு வங்கியில் தன் மேலதிகாரிகளின் பணத்தை தனது வங்கி கணக்குக்கு மாற்றிவந்த ஜோதி, இதன் மூலம் பெற்ற பணத்தில் பெரும் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். குடும்பத்துடன் சைப்பிரஸ்ல் தான் புதிதாக வாங்கியிருந்த 750,000 பவுண்ட்ஸ் பெறுமதியான உல்லாச மாளிகையில் குடிபுகவிருந்த சமயம் கைதானார்.

சதக் நீதிமன்றில் எடுக்கப்பட்ட இவ்வழக்கில் 35 வயதான ஜோதிமீதான 14 குற்றச்சாட்டுகள் நிருபணமாகி, அவருக்கு 7 வருட சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பணத்தை வெளிநாடுகளுக்கு மாற்றிய குற்றத்துக்காக அவரது 50 வயதான கணவர் அந்துலிக்கு 18 மாத சிறைத்தண்டனையும், இதே குற்றத்திற்க்காக ஜோதியின் தாயார் டொக்டர் தேவிக்கு 6 மாத கால ஒத்திவைக்கப்பட்டுள்ள தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரியில் கல்விகற்ற ஜோதி நோத் சீம் லண்டன் நோட்டில் வசித்துவந்தவர். ஜோதிக்கு ஒரு குழந்தையுள்ளது. கணவர் அந்தனி ஆடம்பர கார் சாரதியாக தொழில் புரிந்து வந்துள்ளார்.

மோசடிப்பணத்தில் ஆடம்பர கார்கள், வீடுகள், உல்லாசப்படகு, ஆபரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்திருந்த ஜோதி 10,000 பவுண்ட்ஸ் ஐ தொண்டு நிறுவனமொன்றுக்கும் வழங்கியிருந்தார்.

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வகனங்களை, வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் கோகித்து மதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்
தரமான பிரத்தியேக சேவைக்கு நாடுவோண்டிய இடம்
PERMA
INTERNATIONAL SHIPPING LTD
தொடர்புகளுக்கு: சிவம்
450 Cruise Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Fax; 020 8646 5557
Mobile; 07939 553397

இது ஒரு காதல் கதை

நாற்பது ஆண்டுகால மணவாழ்விலும் காதல் மனைவி நான்ஸியை மறக்காத றேகன். ஹாலிவுட் திரை உலகையும் அமெரிக்க அரசியல் உலகையும் வியக்க வைத்த காதலர்கள். கடுகதியுகத்தில் இப்படியும் ஒரு காதலா?

விமல் சொக்கநாதன்
ஒரு பேப்பருக்காக

இது ஒரு காதல் கதை

சினிமாவில் கதாநாயகனாக நடித்து புகழ் பெற்றபின் ஒரு அரசியல் தலைவராக, நாட்டுத் தலைவராக, மாநில முதல்வராக பதவி ஏற்றவர்கள் வரிசையில்-

எம் ஜி ஆர், என் ரி ராமராவ், என்று அடுக்கினால் முன் வரிசையில் நிற்பவர் றொனால்ட் றேகன்,

அரசியல் வாழ்வு அப்படியாக இருந்தாலும் இப்படியான சினிமா தலைவர்களின் தனிப்பட்ட வாழ்வு குளறுபடியாகவே இருந்து வந்திருக்கிறது.

றொனால்ட் றேகன் இதற்கு விதிவிலக்கு. மிக விசித்திரமான ஏக பத்தினி விரதன் இவர்.

தான் மனப்பூர்வமாக காதலித்து கரம் பற்றிய நான்ஸியை கடைசிவரை தன்னருகில் வைத்திருந்து உலக அரசியல்வாதிகளுக்கு உதாரணமாக திகழ்ந்தவர் றேகன்.

வெள்ளை மாளிகைக்கு வருமுன் அப்படி இப்படி வாழ்ந்தாலும் அதிபர் பதவி ஏற்றதும் தலைகீழாக மாறச் செய்கிறது பதவி மோகம் (உலக உத்தமர்) எனப்பட்ட அதிபர் ஜோன் கென்னடி சினிமா நடிகை மாரிலின் மொன்றோவை அடிக்கடி தன் அந்தப்புரத்திற்கு அழைப்பித்தாராம்.

அதிபர் பில் கிளின்டன் தன் அந்தரங்க செயலாளர் மொனிக்கா லுவின்ஸ்கியுடன் கொண்ட தொடர்பு பகிரங்கமாகவே தெரிந்த ஒன்று.

ஆனால் றொனால்ட்றேகன் மீது எவரும் எக்காலத்திலும் இம்மியளவு மாசும் கற்பிக்க முடியாது.

அமெரிக்க அதிபர் என்ற பதவியின் வரலாற்றில் நாங்கள் நேரடியாக கண்டு ரசித்த காதல் காவியம் நான்சி றேகனின் திருமண உறவுதான் என்கிறார் பிரபல நடிகர் சார்ள்டன் ஹெஸ்டன்.

இவர்களின் காதல் அரும்பியது ஹொலிவூட் திரை உலகில்தான். றொனால்ட் றேகன் அப்போது நடிகர் சங்கத்தின் தலைவர். நான்சி ஒரு குட்டி நடிகை.

காதலித்து கரம் பற்றி இரண்டு குழந்தைகளைப் பெற்றபின்னும் காதல் தொடர்ந்தது. றேகன் அரசியலில் நுழைந்த பின்னும் காதலர் இருவரின் கருத்தொருமித்த போக்கு பல மடங்காக பெருகியது கண்டு அமெரிக்க அரசியல் உலகம் வியந்தது. அதிபர் நடந்த பாதையெல்லாம் மனைவி நான்சி கையோடு கை கோர்த்து நடந்தார். கம்பீரமாக ஒயிலாக நடந்தார். முன்னாள் சினிமா நடிகை என்றாலும் இணை பிரியாமல் தலைவனுக்கு பக்க பலமாக சேவையாற்றியது கண்டு நிருபர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

இது வெறும் நடிப்பு என்றுகூட சில நிருபர்கள் பொறாமையினால் எழுதினார்கள். தான்சிக்கு சோதிடத்தில் அபார நம்பிக்கை இருந்தது. எனவே அவரின் பயணங்கள் ஆரம்பமாகும் திகதி நேரம் போன்றவற்றை அவர் தானாக

மாற்றினார். இதனால் அதிபரின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தர்மசங்கடங்கள் ஏற்பட்டன.

தீர்க்க முடியாத நோய் றேகனுக்கு ஏற்பட்டதாக றேகனுக்கு வைத்தியர்கள் சொன்னபோது அவர் தமது நாட்டு மக்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

லட்சக்கணக்கான அமெரிக்க மக்களை இப்போது பாதித்துள்ள இந்த நோய் எனக்கும் வந்திருப்பதாக மருத்துவர்கள் சொன்னதும் என் சிந்தனை எல்லாம் என் மனைவி நான்சி பற்றியதாகவே இருந்தது நோயின் நீண்டகால தாக்கத்தை அவள் எப்படித் தாங்கப் போகிறாள்? ஆனால் இந்த மிக நீண்ட பிரியாவிடைக்கு நான்சி தயாராக மனதை உறுதியாக்கிக் கொண்டிருந்தார்.



இதுவும் ஒரு காதல் கதை

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுபவை திருமண உறவுகள் மட்டுமல்ல! அரசியல் உறவுகளும் தான்!

அமெரிக்க வெள்ளை மாளிகையில் றேகன் லண்டன் டவுணிங் தெரு மாளிகையில் மார்கிரெட் தாச்சர்.

உலகின் தலை எழுத்தை திசை திருப்பிய இருதலைவர்கள். இன்பத்திலும் துன்பத்திலும் அரசியல் வாழ்வின் ஏற்ற இறக்கங்களிலும் பிரதமர் மார்கிரட் தாச்சர் அம்மையாரும் அமெரிக்க அதிபர் றொனாட் றேகனும் ஒருவரை ஒருவர் ஆதரித்தார்கள் கடைசிவரை ஆதரித்தார்கள் அடிக்கடி சந்தித்தார்கள் நிறைய பேசிக்கொண்டார்கள்.

இணைத்த பசை

இருவரையும் இணைத்த பசை எது? இருவரும் கம்யூனிச சித்தாந்தங்களை வெறுத்தார்கள். சோவியத்கரடி நாடுகளைப் பிடித்து வருவதை தடுத்து நிறுத்த விரும்பினார்கள். அரசாங்கத்தின் தலையீடற்ற பொதுமக்கள் முதலீட்டையும் பொருத்தகட்டுப்பாட்டை ஆதரிக்கும் பொருளாதாரக் கொள்கையினை இருவருமே செயற்படுத்தினார்கள்.

பிரிட்டனில் 1978 ல் ஆட்சிக்கு வந்த இரும்புத்தலைவி மார்கிரெட் தாச்சர் அடுத்த 4 வருடங்களில் தொலைதூரத்து ஆர்ஜென்டினா நாட்டுடன் போர் தொடுக்கும் நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் டாக்லண்ட் என்ற சிறியதீவு பிரிட்டன் போர்க்கப்பல்கள் அணிவகுத்துப் புறப்பட்டன. பிரிட்டிஸ் மக்கள் அனைவரும் இதை சமூக பாகு பாடுகள் இன்றி 1944 ல் போல மீண்டும் போரை ஆதரித்தார்கள்.

தன் தோழி தாச்சரின் முடிவை அமெரிக்க அதிபர் முழுமையாக ஆதரித்தார். ஆர்ஜென்டினாவின் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளைப்போட்டது அமெரிக்க மக்களை இது பாதிக்கலாம் என்று கூட சிந்திக்காமல் அதிபர் றொனாட் றேகன் பிரிட்டனுக்கு ஆதரவு தந்தார். ஈற்றில் ஆர்ஜென்டினா தோல்விகண்டது

82 ம் ஆண்டு டாக்லண்ட் போருக்குபின் 85 ல் அப்போதைய பின்லாடன் என்று அழைக்கப்பட்ட லிபியத் தலைவர் கடாபியை அரசியல் படுகொலை செய்ய அமெரிக்க படைகள் அனுப்பப்பட்டன அந்தப்படைகள் தாக்கிப் புறப்பட்ட பிரிட்டிஸ் படைமுகாம்கள் பயன் படுத்தப்பட்டன.

இதற்கு பிரிட்டிஸ் மக்களின் அனுமதி பெறப்படவில்லை. முதன் முதலாக பிரிட்டிஸ் மக்கள் கேள்விப்பட்டதே தாக்குதல் நடந்து முடிந்த பின்னர்தான். நேச நாடு என்றால் நேசநாடாக இருக்கவேண்டும் என்று வாதாடினார் அப்போதைய பிரதமர் தாச்சர் இருவரது பதவிக்காலங்களும் முடிந்த பின்னர் கூட இந்த விசேட நட்பு காதலர்கள் போன்ற புரிந்துணர்வு அரசியல் உறவு நீடித்தது.

1998ல் அதிபர் றேகனின் பெயரில் தங்கப் பதக்கம் ஒன்றை றேகனின் மனைவியார் தாச்சர் அம்மையாருக்கு வழங்கினார் இதற்கு நன்றி தெரிவித்து பதிலுரை வழங்கும் போது தாச்சர் அம்மையார் சொன்னார்

வரலாற்றின் பாதையை திசை திருப்பிய ஒரு மாமனிதர் பெயரால் வழங்கப்பட்ட இந்தப் பதக்கத்தை பெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JUNE 18, 2004, ISSUE 01

இணையத்தில் விசமிகள்

தகவல்கள் நிரம்பி வழிகின்ற ஒரு யுகத்தில், இன்னுமொரு ஊடகமாக பத்திரிகையுலகில் ஒரு பேப்பர் காலடி வைக்கின்றது. வெறும் பொழுது போக்கு அம்சங்களை பிரசுரிப்பதுடன் நின்று விடாது, ஒரு சமுகப்பொறுப்புணர்வுடைய ஊடகமாக செயல்படுவோம் என கட்டியம் கூறி நிற்கின்றோம்.

தகவல் தொழில் நுட்பத்தின் அபரிதமான வளர்ச்சி வெறும் தகவல் பரிமாற்றத்துடன் நின்று விடாமல் சனநாயகத்தின் ஆணிவேரான கருத்து சுதந்திரத்துக்கு வழிசமைத்துள்ளது. இணையத்தில் ஓரளவுக்கேனும் மற்றைய ஊடகங்களை காட்டிலும், சிறுபான்மை கருத்துக்கள் எந்த தணிக்கையுமின்றி வெளியிடக் கூடியதாகவுள்ளது. சீனா போன்ற சில நாடுகளைத் தவிர மற்றய நாடுகளில் இணையத்தளங்கள் தணிக்கைக்குள்ளாக்கபடுவதில்லை.

சனநாயகத்தை பலப்படுத்தும் இணையத்தின் வளர்ச்சி பலராலும் வரவேற்கப்படுகின்ற போதிலும், அதன் தவறான பயன்பாடானது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதோடு, புதிய தணிக்கை முறைகள் பற்றியும் சிந்திக்கவைத்துள்ளது. குறிப்பாக மேலை நாடுகளில் சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள் அதிகரித்துள்ளமைக்கு இவ்வகை உறவுகளை சித்தரிக்கும் இணையத் தளங்களின் வருகையே காரணமாகக கூறப்படுகின்றது. ஐக்கிய இராட்சியத்தின் மிகப்பெரிய இணையத் தொழில்நுட்ப நிறுவனமொன்று அதன் பாவனையாளர்கள் இத்தகைய தளங்களை பார்வையிடுவதனை தடைசெய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இணையத்தில் தொடர்பாளர்களின் அனாமதேயத் தன்மை பலசமுதாய சீரழிவுகளுக்கு இட்டுச்செல்வதை அன்றாடம் செய்தி ஊடகங்கள் அறியத்தருகின்றன.

இத்தொழில்நுட்ப வளர்ச்சியானது தமிழ் ஊடகத்துறையிலும் அண்மை காலத்தில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றது. ஒருபுறம் பல புதிய தளங்களின் வருகை தமிழர் தேசம் சம்பந்தமான செய்திகளை, தகவல்களை உடனுக்குடன் தருவதன் மூலம் உலகெங்கும் பரந்துகிடக்கும் தமிழர்களின் இணைவுக்கு வழிசமைக்க, இன்னும் சிலவோ தமிழர்களைகுறிப்பாக ஈழத் தமிழர்களை பிளவுபடுத்துதலையே குறிக்கோளாக கொண்டு இயங்கிவருகின்றன. இந்த இரண்டாவதுவகையில் பாங்கொக்கிலிருந்து இயக்கப்படும் Asian Tribuneஐ சுட்டி காட்டவேண்டியுள்ளது. புனைகதைகளையும், பாதி உண்மை பாதி கற்பனைகளை செய்திகளாக்கி, இணையத்தின் அனாமதேயத் தன்மையை மூலதனமாக்கி, ஈழத் தமிழர்கள் மத்தியில் பிரதேசவாதத்தை வளர்க்க முற்படும் இவ்விசமி களை அடையாளங்கண்டு ஒதுக்கவேண்டியது அனைத்து தமிழர்களினதும் கடமையாகின்றது.

What a way to earn US$ 4.5 billion!

What is happening to the peace process in Sri Lanka? That is the question that is on everybody's lips. The short answer to that question is – Nothing. What is really happening is President Chandrika Bandaranaike Kumaratunga's manoeuvrings to achieve one objective and one objective only -- that is, how to get her hands on the US$ 4.5 billion aid package the co-chairs of the Tokyo Conference on Reconstruction and Development have been dangling before her. But there lies her dilemma. The package is linked to the peace process. A Press statement issued by the co-chairs at Brussels on June 1, leaves no doubt about that "The peace process and the development process are mutually reinforcing and interlinked..." they have said. Unless the peace process is revived, she has to kiss goodbye to the money, money she can't do without.

So how does she move the process forward? It means talking to the Tigers. But the Tigers have said without any iota of doubt that the talks could proceed only on her acceptance of their proposal for an Interim Self Governing Authority (ISGA). But she has been maintaining that "core issues" should be discussed concurrently. Nothing doing, said the Tigers. It was a question of who would blink first. At her recent meeting with the M.Ps of the Tamil National Alliance at Janadhipathi Mandiraya, (at which meeting her paid adviser and unelected Foreign Minister was significantly absent), the lady came down one step from her pedestal. She told the parliamentarians that she was now prepared to talk on the ISGA proposals, although the government felt the need to engage in discussions on a "permanent solution to the conflict." What she obviously had in mind was an assurance from the LTTE that they have given up the goal of a separate state! It would be stupid on her part to expect that from the LTTE.

No sooner had the news leaked out, the major constituent partner in her government, the JVP, began howling in protest. They threatened "extreme action," if she dared to talk to the LTTE on the ISGA proposal. That could even mean walking out of her government. It was of course the tail wagging the dog! Caught between US$ 4.5 billion on the one hand, the LTTE and the JVP on the other, there was only one escape she could think of. She caught the Emirates Airways flight to London! It was evasive action, good enough for the time being. Meanwhile, the peace process will wait.

ஒரு பேப்பர்

நண்பர்களே,

ஒரு பேப்பர் மூலம் இப்பொழுது
உங்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம்.
நேசமொழியில் பேசவே பிரியப்படுகின்றோம்.

ஒரு பேப்பர் - இது தேவைதானா என்று நீங்கள்
கேட்பது எமக்குப் புரிகின்றது நிறையப் பத்திரிகைகள்
சஞ்சிகைகள் வருகின்ற சூழலில் இன்னுமொன்றா?
ஓகோ!
வியாபாரம் செய்ய வருகின்றீர்களோ?
என்று நீங்கள் கேட்டால்,

இல்லை என்று நாம் மறுக்க மாட்டோம்.
அதற்காக ஓம் என்று நாம் முழுமையாக
ஒப்புக் கொள்ளவும் மாட்டோம்.

ஊடகத்துறை எங்களுக்குப் பிடித்திருக்கின்றது.
ஊடகத்துறையில் அனுபவம் இருக்கின்றது.
கணனி அறிவும் கூடவே கைவரப் பெற்றிருக்கின்றது.
மேலாக ஊடகத்துறையின் ஊடாக உங்கள்
எல்லோரையும் சந்திக்க மிக ஆவலாக உள்ளோம்.
எனவே ஒரு பேப்பர் தொடங்கினோம்.

ஒரு பேப்பர் உங்களை இலவசமாக வந்தடைய
வழி வேண்டும் தானே?
அதற்கு வசதியாகத்தான் வியாபாரம்.

ஒரு பேப்பர் நடாத்துகின்ற நாங்கள் யார்?
கேட்கின்றீர்களா?
இந்தப் பத்திரிகையின் நதிமூலம், ரிசிமூலம் என்ன?
இதற்குப் பணம் தருகின்ற நிறுவனம் எது?

எந்தப் பத்திரிகையில் இருந்து பிரிந்த குழு இது?

இப்படிக் கேள்விகள் எழும். இன்னும் நாம் ஊகிக்க
முடியாத ஆயிரம் கேள்விகள் எழும்.
ஓம், நாங்கள் யார்?

குமரன், செல்வி என்று பெயரைச் சொல்லலாம்.
தமிழன் என்று இனத்தைச் சொல்லலாம்.

மனிதன் என்று பொதுப்படக் கூறலாம்.

என்ன சொன்னாலும் நீங்கள் என்ன
செய்யப்போகின்றீர்கள்.

ஒரு பேப்பர் பத்திரிகையை வாசிக்கலாமா, விடலாமா
என்று யோசிப்பீர்கள்

இல்லை வாசியுங்கள். வாசிக்க வேண்டாம் என்று
யாரும் சொன்னாலும் நீங்கள் வாசிக்கத்தான்
போகின்றீர்கள்.

காரணம்?

ஒரு பேப்பர் உங்களை வாசிக்கத் தூண்டும் உங்கள்
ஆர்வத்தைத் தூண்டும் விதமாக அத்தனை
விடயங்களும் இருக்கும்.

உங்கள் மீது அத்தனை நம்பிக்கை எமக்கு
இருக்கின்றது.
அதுபோல்,
எங்கள் மீதும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.
இது தன்னம்பிக்கை. தலைக்கனம் அல்ல.

ஒரு பேப்பர் தர இருப்பது என்ன?

மனிதம் என்ற மையத்தில் நின்று அது சுழலும்.

தமிழர் என்ற தனித்துவத்தை அது பேணும்.

இதுவே ஒரு பேப்பர்

ஒரு பேப்பர் நல்லன செய்யும்.
நல்லன செய்வோருக்கு நண்பராக நிற்கும்.

அவ்வளவே.

COMMENT

PRESS FREEDOM AND TAMIL RIGHTS

DR. A.G. Sankaralingam

We are living in a country where there is freedom of expression both speech and written and people are able to give their opinion openly without fear of repercussions. This is in contrast to SriLanka where Tamils are prevented from expressing their views freely, especially in the English medium, for the fear of it being exposed to the international community. Any attempt in the past to publish views of Tamils have ended with journalists being killed or silenced by threats and establishments being destroyed or forced to shut down. Twenty years ago Saturday Review was banned and its editor forced to leave the country.More recently Weekend Express and Northeastern Herald which aired the Tamil views have collapsed for want of sponsors who kept away due to fear being victimised. Despite all these terror tactics Tamils had been time to time able to counter the propaganda of the SriLanka government.We wish that Tamils should continue this good work.

One of the main reason that the SriLanka government has failed to suppress the Tamil aspirations in SriLanka is that they did not know or more correctly they did not want to know about the commitment of the Tamil people regarding their struggle to win their rights. It is indeed tragic that the SriLanka government only wants views of Tamils which are in unison with their agenda heard or read. Naturally policies based on those misleading views have brought disaster.The very fact that what happened in SriLanka in the past is quite contrary,clearly proves that there was something wrong radically.This is our humble effort to bring out the truth and to give a forum for the Tamils to express their opinion in English. SriLanka government must understand that suppression of expression is not going to put out the flame of the struggle of the Tamils for justice and honour.

ஆடும் ஓநாயும் போல சந்திரிக்காவும் சமாதானமும்

செங்குட்டுவன்
ஈழநாதத்திற்காக

நிரந்தர சமாதானத்தை நோக்கிய பாதையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது இது சந்திரிக்கா அம்மையாரின் மிக அண்மைக்கால சமாதான முயற்சிகள் குறித்த கருத்தாகும். தற்காலிக சமாதானத்தையே கடந்த இரு வருடங்களுக்கும், மேலான காலப்பகுதிக்கும், எத்தனையோ தடவை குழப்ப முயன்று அதனை தற்போதைய இடியப்பச்சிக்கல் நிலைக்கு கொண்டுவந்தவரே அம்மணிதான்.

இப்பொழுது தற்காலிக சமாதான நிலையை தக்கவைக்கவே 'ததிங்கிணத்தோம்' போடும் நிலையில் நிரந்தர சமாதானம் குறித்து அம்மையார் கவலைப்படுவதுதான் வேடிக்கையாக உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையை அதன் ஆரம்பகட்டத்திலேயே நேர்மையான முறையில், இலகுவாகவும், புரிந்துணர்வுடனும் பேசித்தீர்க்கும் வாய்ப்புக்களையெல்லாம் அற்ப்பத்தனமான அர்த்தமற்ற அரசியல் சுயநல ஆதாயங்களுக்காக நழுவவிட்டுவிட்டு, அந்தப்பிரச்சினையை வைத்தே தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க முனைந்த சிங்கள பேரினவாதத் தலைவர்களின் வரலாற்றுத் தவறுகளே இன்றைய சிக்கல்களுக்கெல்லாம் மூலகாரணம்.

சந்திரிக்காவின் தந்தை பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள சட்டம் என்ற முட்டாள் தனமான கருத்து நிலைப்பாட்டின் தீவிரமூட்டிய இனவெறித்தீயினை அவரைத்தொடர்ந்து அரசியல் பண்ணிய அனைத்து சிங்கள தலைவர்களும் காலத்துக்கு காலம் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு பிரச்சினைகளை காரணமாக்கி கொழுந்து விட்டெரியச் செய்தமையின் விளைவையே இன்றும் சிறிலங்கா அனுபவித்து அழிந்துகொண்டிருக்கிறது.

என்றால் அதில் மிகையில்லை.

ஆகச்சிக்கலை உருவாக்கிய தலைமை வாரிசுகளாவே இன்னை சிங்களத்தலைவர்களும், அவர்களின் பக்க துணைகளும், தம்மை இம்மியும் பிசகாமல், இன்னமும் தமது அரசியல் இலக்குகளை வரித்துக் கொண்டிருக்கும்போது. சிக்கல்கள் மேலும் அதிகரிக்குமேயன்றி குறையுமென எவரும் நினைத்தால் அது கோமாளித்தனமேயாகும்.

இந்தச் சிக்கலைத் தீர்க்க சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்னு அழைப்பு விடுத்துள்ள சந்திரிக்கா இதே அழைப்பினை ரணில் விடுத்த போது அதனை ஏற்கமறுத்து ரணிலின் சமாதான நகர்வுகளை புறக்கணித்ததுடன் அந்த சமாதான முன்னெடுப்புகளை குழப்பி தடுக்க பகீரத முயற்சி செய்தார் என்பது வெளிப்படையான விடயமே.

ஐ.தே.முன்னணி ஆட்சியை சந்திரிக்கா கலைத்தமை சமாதான முயற்சிகளை குழப்பும் அல்லது மேலும் சிக்கலாக்கும் சதியின் அங்கமேயாகும்.

ஆட்சியை தம்வசமாக்க சமாதான முயற்சிகளை கடுமையாக விமர்சித்து, சமாதான ஏற்பாட்டாளர்களை கண்டித்து, அதன் வளர்ச்சிப்போக்கு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது, என்று பீதியூட்டி, மக்களை அதாவது பௌத்த சிங்கள மக்களை சமாதானத்திற்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை எடுக்கவைத்துதேர்தலில்வென்றபின்னர் மீண்டும் சமாதான சங்கீதம் பாட வெளிக்கிட்டமைக்கு காரணம் வெளிப்படையான விடயமாகும்.

சமாதானம் பேசினால் நிதிவளத்தை பெறலாம் என்ற நிலையில் தற்காலிக சமாதனத்தையே குழப்பிக் கூத்தடித்தவர் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முனைகிறாராம்! ஆனால் அதற்கு பல சிக்கல்களை சந்திக்க வேண்டி இருக்குமாமம்!

ஒன்றுமட்டும் சந்திரிக்காவின் நடவடிக்கைகளில் இருந்து தெளிவாகின்றது.

சமாதானத்தை மேலும் சிக்கலாக்க என்ன செய்யலாம் என்று யோசித்து பழக்கப்பட்ட அவரால் தற்போதைய சமாதானத்தையே பாதுகாக்க முடியாது என்பதே அதுவாகும்.

சமாதானத்திற்கான யுத்தத்தை செய்தவர் இனியும் யுத்தத்திற்காக சமாதானத்தை சிக்கலாக்குவார் என்பதையே அம்மணியின் நடவடிக்கைகள் உணர்த்தி நிற்கின்றன.

பத்தாயிரம் கைகள் இதைக் காவும் . . .

ஊடகம்

விமல் சொக்கநாதன்

தமது நாட்டு மக்கள் எந்தச் செய்தியைக் கேட்கவேண்டும் எந்தச் செய்தியைக் கேட்கக்கூடாது என்று சில நாடுகளின் அரசாங்கங்கள் கெடுபிடியாக இருக்கின்றன. இந்த சற்றிலைட் செய்கோள் யுகத்தில் கூட தமது நாட்டு மக்கள் எந்தெந்த வெளிநாட்டு ஒலிபரப்புகளைக் கேட்கவேண்டுமென்று உலகின் சில கோமாளி அரசுகள் முனைவது விசித்திரமாக இருக்கின்றது.

இலங்கையின் தற்போதைய சந்திரிகா அரசும் இதைத்தான் செய்து வருகின்றது. தூய்மையான தமிழ் ஒலிபரப்புக்கு பெயர்பெற்ற இலங்கை வானொலியை காலம் காலமாக தமது ஊது குழலாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள் இலங்கையின் நீல நிற, பச்சை நிற ஆட்சியாளர்கள் இதனை நிறை வேற்ற இவர்கள் செய்வது என்ன?

தமது அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே இலங்கை வானொலியின் ஒலிபரப்பு மாஅதிகாரியை மாற்றிவிட்டு தமது கைப் பொம்மை ஒன்றை அந்தப் பதவியில் அமர்த்துவதுதான் அரசாங்கத்திற்கு சிஞ்சா அடிப்பது தவிர வேறு எந்த ஒலிபரப்பு அனுபவமுமே இல்லா இவர் தமது மாமன் மச்சான் தமது சின்ன வீட்டின் பெரியப்பா இப்படி அனைவரையும் சேர்த்துக்கொண்டு அட்டகாசம் செய்வார். உலகப் புகழ் பெற்ற இலங்கை வானொலியின் பெயர் சேற்றில் முழ்கும்.

இந்த வகையில் தற்போது இலங்கை வானொலியின் ஒலிபரப்பு மா அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள ஹட்சன் சமரசிங்கா முன்னால் சிங்கள அறிவிப்பாளராக கடமையாற்றியவர் பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில் கொள்கை பரப்புச் செயலாளராக பதவி வகித்தவர்.

எதிர்க்கட்சியான சந்திரிகாவின் மக்கள் முன்னணிஅரசில் ஒலிபரப்பு மா அதிகாரியாக இவர் எப்படி நியமனம் பெற்றார் என்பது வேறு விஷயம்.

இனி இவர் அண்மைக்காலத்தில் தமிழ் ஒலிபரப்பில் செய்துவரும் கூத்து பற்றி கவனிப்போம்

உலகத்தமிழ் வானொலியில் நேர் சீரான தூய தமிழ் ஒலிபரப்பு என்று பாராட்டப்படும் லண்டன் பி பி சி யின் தமிழோசை நிகழ்ச்சி தினம் தினம் அரை மணி நேரம் இலங்கை வானொலி தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பாகி வருவது தெரிந்த செய்தி.

இங்கேதான் மா அதிகாரி சமரசிங்காவின் விஷமத்தன்மை அம்பலமாகிறது. தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தியதாக கருதப்படும் லண்டன் தமிழ் வானொலி ஒன்றை தினசரி ஒருமணிநேரம் அஞ்சல் செய்து ஒலிபரப்பி வருகின்றார்.

தமிழர் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் இந்த லண்டன் வானொலி ஈழத்தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் நடாத்தும் ஒரு வானொலி என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

ஆனால் அந்த லண்டன் வானொலியின் விஷமத்தனத்தை விட, இலங்கை அரசாங்கத்தின் விஷமத்தனம் பல வினாக்களை எழுப்பியிருக்கின்றது.

இந்த ஒலிபரப்பை தினசரி இலங்கை வானொலியில் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்ப மா அதிகாரி அரசாங்க அனுமதி பெற்றாரா? அப்படியானால் இந்த அனுசரணை வழங்கிய அமைச்சர் யார்? ஜனாதிபதி சந்திரிகாவே இதற்கு சம்மதித்தாரா?

சமாதானம் வேண்டும் வேண்டும் என்று தினசரி மேடையில் குரல் எழுப்பும் சந்திரிகா குழுவினர் இந்த விஷமத்தனத்தை தமிழ் ஒலிபரப்பு அஞ்சல் மூலம் இலங்கையின் தமிழ் மக்கள் மனதை புண்படுத்தி வருவது ஏன்?

சமரசம் பேச செல்லும்போது தெளிந்த சிந்தனை வேண்டும் பிரச்சனைகளின் வேறுபாடுகளை தீர்க்க நாட்டம் இருக்க வேண்டும் வாக்கினில் இனிமை வேண்டும். கசப்பான கருத்துகளும் நையாண்டிகளும் தேவையே இல்லை.

எமது கருத்துப்படி இந்த இலண்டன் வானொலியை இலங்கையில் ஒலிபரப்புவதன் மூலம் ஈழத்தமிழர்கள் ஈர்க்கப்படவில்லை மாறாக ஒதுக்கப்படுகிறார்கள். ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்றோ பெறாமலோ நடக்கும் இந்த தமிழ் ஒலிபரப்பு அஞ்சல் நிறுத்தப்படவேண்டும்!

ஒலிபரப்பு மா அதிகாரி தமிழ் மக்களின் கருத்துக்களுக்குச் செவி சாய்த்து மாசு நிறைந்த தமிழ் ஒலிபரப்பை நிறுத்தி மக்களை மகிழ்விக்கவேண்டும். பொறுப்பான ஒரு அரச அதிகாரிக்கு அதுவே அழகு அதுவே அவரது கடமையும்கூட.

ஒரு பேப்பர் ORU PAPER

Murder of a Tamil Journalist: Is it almost the last straw?

While Sri Lankan military is continuing with the killings of Tamil nationalists using Karuna group violence as a cover, the LTTE is becoming more and more convinced that the Sri Lankan government is embarking on a serious military project to weaken it, writes, Dinesh Rasaih.

On 31 May, Aiyathurai Nadesan, a Tamil journalist in Eastern Batticaloa district was shot and killed. Nadesan was a regular columnist on an independent Tamil newspaper, Virakesari and a reporter for many overseas Tamil radios.

He is well known among Sri Lankan Tamils home and abroad. The murder created an outcry among Sri Lankan Tamil population and sparked several protests.

Nadesan's murder was the latest in a series of incidents, which have been taking place in the East after the ouster of Karuna group from the area. They started in Aayithiamalai with the killings of disabled LTTE fighters.

Joining hands with Sinhala media, the Colombo based foreign media tried to explain away these incidents as continuing violence between Karuna group and the LTTE forces. Nadesan's killing was no different.

Continuing with their hypocrisy all the western embassies, the bastions of democracy preachers for this third world nation failed to put up press statements condemning the killing of a renounced Tamil journalist. One could not resist the temptation to imagine the reaction from the US embassy in particular if the killed journalist was a Sinhala nationalist.

Despite the misleading information spread by Sinhala and international media, even a cursory look at the ground reality in Batticaloa - Ampara region will reveal the real culprits behind these murders.

Sources close to the LTTE in Batticaloa say that Karuna fled with 22 people when LTTE forces launched the offensive against him. His rebellion never had any political standing and it was rather a personal one.

There isn't a single village in Batticaloa and Ampara district that is carrying out a popular uprising against the LTTE in favour of Karuna.

Aiyathurai Nadesan, 49, is a senior journalist in Sri Lanka's Tamil Media

With total lack of power base it is unlikely that Karuna could carry out subversive operations staying as an independent armed group.

It is an open secret now that sections of the Sri Lankan Army actively helped Karuna during his rebellion and tried to protect his base by actively deploying their units along A5 high way.

Intelligence sources in Batticaloa say that Karuna has been given accommodation in a Sri Lankan Army camp in Pollanaruwa. His associate Pillaiyan is kept in Sri Lankan Army's Minneriya camp and is taken out by Sri Lankan military intelligence unit to carry out attacks on soft targets time to time. Nadesan was one of them.

The deafening international silence on Nadesan's murder except statements from few NGOs added to the Tamil frustration. This led one Tamil writer to write, "All the people who preach the Tamils and the LTTE with international terrorism and democracy are now silently watching the slaying of a Tamil journalist as a death of the Tamil Tiger".

With this high profile murder pressure on the LTTE to do some thing increased. Officially LTTE said, "Killing of intellectuals, journalists and friends of Tamil people is abominable. Even during this time of peace, anti-peace forces are engaged in barbaric activities. These actions are bound to lead the people of this island to a period of calamity and destruction."

LTTE's official organ, Viduthalaip Puligal, expressed its genuine frustration and blamed the Sri Lankan government of dirty manoeuvres. It said, "LTTE wishes the current peace atmosphere in the island to continue. It expects this situation to proceed to peace talks. But if the Sri Lankan government wants to disturb this and continue with its dirty manoeuvres then it has to take responsibility for the consequences."

LTTE made it clear that it is in no mood to accept the explanation of Karuna group operating independently. The head of the LTTE's political wing in Batticaloa-Amparai, Mr. E. Kausalyan, said in May, "Karuna's rebellion has become routine explanation for the attacks on [the LTTE]. But these are being organized by the Sinhala military"

Viduthalaip Puligal also blames the government of trying to use "Traitor" Karuna's name to disturb the unity of Tamil people.

Viduthalaip Puligal further states, "The appointment of Sinhala military commanders who are famous for plots and murders in the East demonstrates that the Sri Lankan government is trying to pursue a militaristic politics instead of genuine peace process".

Sri Lankan Army positions where Karuna and his associates were allegedly given asylum

While official warnings from the LTTE came in these strongly worded statements, senior LTTE officials were explaining to their Tamil audience LTTE's view and its future cause of action. One of them was Mr V Balakumaran, a senior LTTE official close to the LTTE leader Mr. V. Pirapaharan.

He said addressing a remembrance meeting of Nadesan: "We know who was behind this murder and we know where traitors seek sanctuaries" implying Sri Lankan military camps. He promised this murder to be a "turning point" in Tamil Nation's history.

The writing on the wall cannot be much clearer than this. Current situation in the East and direct involvement of Sri Lankan military in the killings of Tamil Nationalists pose a very serious threat to the ceasefire. LTTE will not wait patiently for an indefinite period. A military response from LTTE will no doubt be a disastrous for the whole island.

Tamil military observers note that military situation is not that bad for the LTTE, as some Sinhala analysts like to think. During the peace process LTTE's mode of thinking is that of political. That is where international players have influence. LTTE's resolve to achieve its goals through peaceful means remains high.

But once into military mode LTTE's thinking will be different and international players will have very little influence.

It is obvious from LTTE statements that the organisation is reluctant to choose a military path right now. In Viduthalaip Puligal LTTE pointed out that in the past these dirty tactics of the Sri Lankan government never worked. This time too it will not work. And LTTE is at pain to request the Sri Lankan government to stop these dirty tactics.

But the LTTE seems to be more and more convinced now that the Sri Lankan government, while paying lip service to peace process to convince the international donor countries, it is in fact embarking on a military project to weaken the LTTE.

To quote LTTE Peace Secretariat's translation of Viduthalaip Puligal: "War or peace? The answer as of date is in the hands of donor nations and their actions alone will decide whether it is war or peace." This is not rhetoric today but rather the reality surrounding Sri Lanka's future.

உங்கள் விளம்பரங்கள்

உங்கள் விளம்பரங்கள்
ஒரு பேப்பரில்!

அழையுங்கள்:
020 8640 4604

AIR SAVERS
TRAVEL AGENTS

நம்பிக்கை, நேர்மை, உத்தரவாதம்
உங்களுக்கு திருப்திகரமான துரித சேவை
குறைந்த செலவில் உலகின்
எப்பகுதிக்கும் பயணம் செய்ய அழையுங்கள்...

open 7 days a week
All major credit cards accepted

020 8540 2226

ATOL 4848

near by South Wimbledon tube station
36 Merton High Street, South Wimbledon, London. SW17 1AU

Website: virtual.towns.com, email: bparam@aol.com

Should the Eelam Tamils fear the Congress government ?

Kurushetran

While the results of the recent elections in India took the world by surprise, they caused diverse expectations from the Sri Lanka government and the people, both Sinhalese and Tamils. While the Sinhala thinking in the south welcomed a Congress government in the belief that it would be inimical to the Tamil Tigers, most Tamils also feared the same – except that they were heartened over the victory of the DMK-PMK-MDMK alliance in Tamil Nadu, and even more jubilant that the tyrannical Jayalalitha met her Waterloo, losing all the seats that the AIADMK contested.

Tamil Nadu factor

Although New Delhi is the seat of power, and all policy decisions are made there, the state of politics in Tamil Nadu had always been a factor in the Indian approach to Sri Lankan affairs. This is more so when there is a coalition government in power in New Delhi. The earlier BJP government had Jayalalitha as their ally in

Calling C

* மி
* அ
* உ
* ெ

£

Best Value-Best Quality-B

For 24 Hour free customer care just dial **0800 989 (**

tional Cards

Best Value for your £££

* மிகக்குறைந்த விலையில்
* அனைத்து நாடுகளுக்கும்
* உடனடி இணைப்புடன்
* தெளிவாக பேசலாம்

Sri Lanka

£5 : 50 minutes

£10 : 110 minutes

y-Best Connection

9 0000 for details Visit www.A9communication.com

TEENSpeak



The summer holidays are fast approaching and I am eagerly waiting for a break from revision, exams etc. Then I thought, well, it is all fine playing my Xbox and chatting to friends for a while but then life becomes monotonous and boring. Thus I decided to find out about traveling in Europe.

When mumsi found out about me having ideas about inter-railing in Europe with my friends she went mad. 'What about safari in Tanzania?' 'definitely not' she said. 'You are not old enough to travel by yourself'. Me being a sixteen years old hard working student, black belt in karate, proficient in Spanish did not cut ice.

I was really upset. 'Tamil mumsis are very protective and annoying' I complained to Tania Johnson.

'Why do you have to be pig headed? Why don't you think of a compromise' she said. I could not think of anything. 'Ideas pleeeze' I begged. 'Nop, you are a cleaver boy, think about doing something where both can be happy about the outcome' she said and walked out.

'Why don't you come to Sri Lanka with me' mumsi later asked. 'What would I do there?' I replied. Temples are boring, relatives ask too many questions, girls are too shy so they don't talk much and all you can do is eat really nice food and sit and read,, I told myself.

I squeezed my brain for few days and then discussed this dilemma with my Tamil School friends. 'Why don't you do a teaching holiday there? One of my cousins did it last summer in some place called Jaffna and really loved it' Sarah (Saraswati really) said. 'Why the hell you want to go to Sri Lanka man, it is a hell hole' Kumaran said.

I don't like Kumaran as I consider him a menacing ass even though my sister would not agree with this. Both of his parents are doctors and all he talked about was Oxford, Cambridge, medicine, A stars, first classes and his parents.

Anyway, I thought about it and did some research. As we are from Mullai-Tivu in Sri Lanka I went on the Web and got some information about possible placements and holiday destinations.

Then I received an email from Tania with just a web link http://seattlepi.nwsource.com/national/175660_pac31.html.

It was not a porn site link as I thought first. It talked about some Sri Lankan techie from the Silican Valley, California who went to Sri Lanka year to set up an IT institute called Vanni Tech.

Vanni Institute of Technology is a high-tech educational institute established by the International Tamil Technical Professionals' Organization. The institute, also known as VanniTech, was inaugurated in June 2003 in the town of Kili-Nochchi. It hopes to teach latest technology to the people of North-East of Sri Lanka, to generate high-tech employment in the region and prepare them to compete in the international market.

International Tamil Technical Professionals' Organization (ITTPO) based in California is an independent, non-profit, and a federal tax exempt organization in the USA and an approved Non Governmental Organization (NGO) in Sri Lanka.

There are about 60 students enrolled in 4 programs. 52% of them are females. VanniTech has about 25 academic and non-academic employees. The staff consists of graduates from Open University of Sri Lanka, University of Jaffna, University of Madras, University of Moratuwa, and University of Peradeniya.

There are 3 administrative offices, 2 lecture halls, a software lab, a hardware lab, a library, a cafeteria and a 13 room hostel.

All of the offices, lecture halls, labs and the library are networked. There are more than 30 computers in the network which consists of switches/Router. It has complete Intranet service with e-mail, database servers and wireless (WiFi) connectivity.

Two diesel powered electrical generators provide adequate power supply.

Currently VanniTech offers 4 programs in the field of computer software, hardware and networking. The duration of the program is about 1 year

VanniTech is said to become an institution to the level of leading universities around the world.

I emailed them (info@vanni.org) and enquired about possible summer placements.. They were really excited about my email and asked me to come up with my own educational programs according to my IT and language abilities and promised to look into it.

I put this idea forward and discussed it with parents. 'The first question father asked was 'how much the whole is going to cost?'.

Mumsi was warm about the idea.. but then I haven't told her about Tania's interest in teaching English or Tamil culture..not yet.

its spliff. . . innit!

Cannabis (ganja, weed, grass, skunk) is the most commonly used illicit mind-altering drug in the world. It is classed as 'a minor hallucinogen with depressant qualities'. That is when smoked or eaten, it has mild mind-expanding, pain and intoxicating effects.

The cannabis plant has been used for thousands of years as a herbal medication and intoxicant. Of the two main species, Cannabis Indica, is the strongest, and is used to make hash and stronger grasses, like skunk. Indica grows from 3 to 6 feet high with fat dark green leaves, purple-ish buds and a distinct stinky skunky smell.

Cannabis Sativa, also known as hemp, is traditionally used to make rope and fibres but can be smoked for a more cerebral high, over Indica's sleepy groggy effects. The plants are very tall with thin light green leaves, reddish buds, and a sweet fruity smell.

The main active ingredient is delta-9-THC or just THC (tetrahydrocannabinol) for short.

Appearance

Cannabis comes in two main forms: marijuana (also known as grass), the dried leaves and female flower heads; and hashish, compressed blocks of resin extracted from the plant.

Grass normally contains between 1 and 5% THC by weight. (1) Hashish is usually stronger (up to 25%) but is easier to adulterate, usually with paper pulp or caryophyllene., a consituent of cloves. (2) Most hash in the UK is of the weak, adulterated 'soap-bar' variety.

Frequently Asked Questions

1) How bad is smoking cannabis compared to smoking tobacco?

Smoking any drug is unhealthy. Cannabis is no exception. The smoke actually contains higher concentrations of cancer causing chemicals than tobacco (cigarette) smoke. Cannabis smokers generally inhale more smoke for longer depositing more than 4 times as much tar on their lungs as cigarette smokers. To balance this, however, they smoke less joints and smoke less often.

However, it is generally accepted that smoking cannabis is not as bad as smoking processed tobacco cigarettes, especially as you smoke less material, less often.

2) A friend of mine told me cannabis doesn't kill brain cells, but makes them dormant. Thus, if you do not smoke for 30-60 days, the effects should go away. Is this true?

Cannabis does not kill brain cells nor does it make them go 'dormant'. Using cannabis can cause temporary impairments in short-term memory and what's called 'executive brain functions', the ability to learn new information or engage in complex manipulation of learned material. These effects disappear as the drug effects wear off.

> Smoking is unhealthy and smoking spliff is no exception!

Long term, chronic cannabis users themselves complain of problems with memory, concentration, loss of motivation, paranoia, depression, dependence and lethargy. However there is no convincing evidence that heavy long-term marijuana use permanently impairs memory or other cognitive functions. So if you want to do really well at school smoking cannabis is not going to help you.

3) Can cannabis make you schizophrenic?

The term schizophrenia literally means split mind; however, many people still believe incorrectly that the condition causes a split personality. It may be defined as a group of mental disorders characterized by abnormal thoughts, moods, and actions; sufferers have a distorted sense of reality and thoughts that do not logically fit together.

There is a lot of misinformation presented about cannabis and schizophrenia. There is general agreement that heavy cannabis use can precipate schizophrenic episodes but there is no evidence that it can cause the underlying psychotic disorder. Heavy cannabis users can exhibit long-lasting toxic psychosis involving delusions and hallucinations that can be - dangerously - diagnosed as a schizophrenic illness.

4) I used to smoke pot quite a bit however I find lately that when I get high - I just get paranoid and edgy? Is it me?

It seems that some people do experience a 'turning point' in their cannabis use when it stops to become enjoyable and instead provokes paranoia, fear or other 'bad trip' type problems.

In a recent study, between 10%-15% of people who smoked cannabis reported "paranoid" or "confused" feelings as a disadvantage of smoking cannabis. And around 30% gave "negative experiences" as their reason for permanently quitting cannabis.

It's not clear why this happens but rest assured, your experience is not unique.

Excuse me, நீங்கள் தமிழா?

Words I long to hear but alas it is not to be!

By: Eliyanachii Narasinghan

Glasgow, Scotland – definitely not a place to be out and about craving for appams, iddiyappams and idlis.The closest one can hope for are perhaps chapattis and naans. Nevertheless life as we know it goes on....

every nation there are wounds to heal. In every heart there is the power to do it."

An Indian friend had on one occasion asked me if I would ever consider working in India and I said I would only if the Jaffna community didn't need me more. I was accused of being selfish but remained silent. For how can I do justice to this intangible feeling deep within me by describing it in mere words! I had not been born in Sri Lanka and neither had my parents but somehow why is it that I feel intrinsically bonded? Perhaps a question better left unanswered.



The Wolfson Medical School Building

Coming to Glasgow has slowed down the pace of my life a gear or two. And no - I am not complaining. In fact, being away from the hustle and bustle of typical Singaporean city life has made me so much more aware and understanding of my surroundings. And that I am thankful for. It has also made me realise the many things that I had previously taken for granted.

The characteristic gloomy weather of Glasgow has led me to appreciate the sun. The return to an empty flat has only made me long for the family banter that I had overlooked in the past. But most importantly I have realised even more what an instrumental role my parents have played in my life and I am truly grateful to them for the opportunity that they have provided me with to pursue a degree in Medicine at the University of Glasgow.

Here, I have learnt to love the pursuing of knowledge. To study purely for the love of it is indeed refreshing and a much welcome change from the stressful exam-based learning back in Singapore. Innovative teaching methods such as the use of actors in lectures, problem- based learning and role- play have without a doubt resulted in the active participation of students. Listening to the various views voiced by my peers has provided me with a more holistic outlook on the practice of medicine and life in general. Moreover, the considerable emphasis placed on communication skills and lifelong learning has given me much hope and confidence in the future of patient care.

Sometimes in solitude endless thoughts and questions prevail in one's mind. One wonders why some people have been given all the opportunities on a silver platter, while so many others are living from hand- to- mouth. Why, more importantly, have I been 'chosen' to experience all these opportunities? This had led me to realise the obvious - that it is for me to reach out and help my people in Jaffna. In the words of the American author Marianne Williamson, "In every community there is work to be done. In

Library

As I look at the many years ahead in Glasgow, I can't help but look forward to every moment of it. For the constant self – discovery and uncovering of knowledge never ceases to amaze. As for whether one wears anything under those kilts, well, you would have to come find it out for yourself!

More about the Faculty of Medicine at the University of Glasgow can be found at http://www.gla.ac.uk/faculties/medicine/index.html

breathe in... breathe out...

Dear Nila,

I am a sixteen years old girl and I live in West London. Currently I am working hard for my GCSEs. Over the past few months I have been having problems concentrating on my studies. The core of the problem is my parents.

My parents are arguing, accusing and blaming each other most of the time. When ever they are together the air is filled with tension. I asked my mother about this and she told me that I'm too young to get involved in adult's problems and to concentrate on my studies. I'm too scared to ask my father about the whole thing.

From what I gathered from listening to their conversations and also talking to Grandmother it seems like it is due to some financial mismanagement by my father.

I was managing it until few weeks ago but with my exams around the corner I'm finding both dealing with exam stress and this domestic situation unbearable.

I started to talk about this with a mate of mine from Sunday School and I'm depending on him for emotional support.

Then my mother found out about me talking to him over the phone and told him not to be silly and wants me to stop talking to him.

I'm really upset as I find the whole thing very stressful and my mother very insensitive.

What should I do about this?

nila says

Well, this is a difficult situation and you seemed to have managed well up to this point. From what you have told me you sound very mature, thoughtful, caring and responsible.

As you grow older you will find life as complicated as you have described. The most important thing is having open channels of communication with parents or who ever the other party is.

You need to speak to your teachers first and explain what is happening at home. Teachers are there to teach as well as to guide us in this sort of circumstances. Remember that a good number of teachers must have had these problems when they were sixteen. Also you need to be frank and tell your parents especially your father how you feel about the whole situation. If you find it difficult to open up write everything down and give it to him. I am sure that if you are going to be frank and honest they will respect that and will find a way to sort their problem out because almost all Tamil parents love their children, value their children's education and emotional stability than anything else.

Dear Nila,

I'm 14 years old boy and I live in Middlesex. I'm starting my GCSEs next year. Regarding what subjects I should choose for my GCSEs etc my parents are bickering over it. They are giving me instructions about what subjects I should do etc. The other day one of my uncles who is a doctor tuned up and gave me a sermon about how wonderful medicine is as a career. My parents later told me that I should become a doctor. I find the whole thing boring and stressful.

I enjoy languages but not science and I am very good in English, French and Tamil. The doctor uncle told me to drop Tamil and start learning Latin as Tamil would be useless in medicine. I want to read English in university and then to become a journalist.

Do you think if I tell my parents about my ambition they might kick me out of the house?

nila says

Well, I think you are not alone, especially among second generation Tamil children in the West. A large number of Tamil parents seem to push their children into careers the children don't seemed to have any interest in. There are two ways dealing with this problem. One is telling them that you enjoy languages and also about your academic strengths and weaknesses and thus justifying your ambition. The other way is agree with them now and then later when it is time to apply for university apply for the course you want to do. I personally prefer the first option as this would give parents time to come to terms with the fact that you are not going to trap yourself into some thing you are not going to enjoy. Remember that there are Tamils and other Asians in every part of our society playing very valuable roles such as journalists, economists, politicians and so on. Good luck.

Feeling heavy.... email Nila at nila@orupaper.com

உலகவலம்

இரக்கத்துடன் கூடிய முதலாளித்துவமே இந்தியாவுக்குகந்தது

நாரயண் மூர்த்தி

முதலாளித்துவ பொருளாதார கொள்கையினை பின்பற்றி வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமாகவும், சந்தை வாய்ப்புக்களுக்கேற்ப கொள்கைகளை வகுப்பதனாலும்தான் இந்தியாவின் வறுமை நிலையை ஒழிக்க முடியுமென இந்தியாவின் மிகப்பெரிய கணணி மென்பொருள் நிறுவனங்களில் ஒன்றான இன்போசிஸ்ன் தலைவர் நாரயண் மூர்த்தி பீபீசி உலகசேவைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் நஸ்டாக் பங்குசந்தையில் நிரல்படுத்தப்பட்டிருப்பதோடு, இந்தியாவில் மட்டுமல்லாமல் ஐக்கிய இராட்சியத்திலும், வடஅமெரிக்காவிலும் அலுவலகங்களைகொண்டியங்கும் இந்நிறுவனத்தின் தலைவர் எளிமையான வாழ்க்கை வாழ்பவர். தனது நிறுவனத்தின் வருமானத்தில் ஒரு பகுதியை தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் நாரயண் மற்றவர்களையும் எளிமையாக வாழும்படி அறிவுறுத்தி வருகின்றார்.

இறைச்சி பாவனை அதிகரிப்பு

உலகில் இறைச்சிப் பாவனை பிரமிக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகின்றது. ஐரோப்பாவில் சராசரியாக வருடமொன்றிற்கு ஒருவர் உட்கொள்ளும் மாமிசத்தின் அளவு கடந்த 40 வருடங்களில் 56 கிலோவிலிருந்து 89 கிலோவாக அதிகரித்துள்ளது. இத்தொகை ஐக்கிய அமெரிக்காவில் 89 கிலோவிலிருந்து 124 கிலோவாகவும் சீனாவிலோ 4 கிலோவிலிருந்து 54 கிலோவாகவும் அதிகரித்துள்ளதாக உலக உணவு நிறுவனத்தை (FAO) மேற்கோள் காட்டி பிரித்தானிய நிறுவனமொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகை கேல் பெரி தடுப்பாணை பெற்றார்

தன்னை பின்தொடர்ந்து தொந்தரவு செய்கின்றார் என அமெரிக்க கடற்படையின் சிறப்புப்படையணி அதிகாரி யொருவர் மீது ஒஸ்கார் விருதுபெற்ற நடிகை கேல் பெரி தொடர்ந்த வழக்கில், நடிகையிலிருந்து 80 மீற்றர் தூரம் வரை விலகியிருக்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அமெரிக்காவின் லொஸ் ஏன்ஜல் நகர நீதிமன்றுக்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கில், இந்த ஜேம்ஸ் பொண்ட் திரைப்பட நாயகி 35 வயதான பிரவ்சார்ட் என்பவர் மீது இத்தடுப்பாணையை பெற்றுக்கொண்டார்.

கொங்கோவில் சதி முயற்சி முறியடிப்பு

மேஜர் எர்க் லெங்கே தலைமையினாலான கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக சனநாயக கொங்கோ குடியரசின் தலைவர் யோசப் கபிலா அறிவித்துள்ளார். சிறிது காலத்திற்கு கிளர்ச்சியாளரின் கட்டுப்பாட்டிலிருந்த அரச வானொலி மீளவும் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள தாகவும், லெங்கே வை தேடும் முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், உள்ளூர்வாசிகளை மேற்கோள் காட்டி சீஎன்என் செய்தி வெளியிட்டுள்ளது.

கொங்கோவின் முன்னாள் ஆட்சித்தலைவர் லோறன் கபிலாவின் படுகொலையையடுத்து அவரது மகனான யோசப் 2001ம் ஆட்சிபீடமேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியேற விரும்பும் யூதர்கட்கு இஸ்ரேல் நஸ்ட ஈடு

இஸ்ரேல் அரசு சர்ச்சைக்குரிய காசா பகுதியிலிருந்து சுயவிருப்பின்பேரில் வெளியேறுவிரும்பும் யூத இன மக்களுக்கு நஸ்ட ஈடு வழங்க முன்வந்துள்ளது. இம்முயற்சிக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இதுவரை கிடைக்காத போதிலும், சுமார் 300,000 அமெரிக்க டொலர் வரை இந்நட்ட ஈட்டு தொகை அமையலாம் என கணக்கிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் படுகொலைகட்கு சேர்பியர் பொறுப்பேற்பு

1995 இல் பொஸ்னியாவின் செர்பனிக்காவில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான முஸ்லீம் மக்களின் படுகொலைகள் சேர்பியர்களாலேயே மேற்கொள்ளப்பட்டதாக பொஸ்னிய சேர்பிய அரசாங்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இக்கொலைகளை மறுத்துவந்த சேர்பியர்கள், உடலங்களை புதைகுழிகளிலிருந்து இடம்மாற்றும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவந்துள்ளார்கள்.

இவ்வாறான சம்பவமொன்றில், 7,000 முஸ்லீம் ஆண்கள் ஐ.நா. பாதுகாப்புபடைகளின் பாதுகாப்பையும் மீறி சேர்பிய படைகளால் கொல்லப்பட்டிருந்தனர்.

சவுதி இளவரசர் கொலை முயற்சியில் லிபியாவிற்கு பங்கில்லை

கடந்த ஆண்டு சவுதி முடிக்குரிய இளவரசர் அபுட் அல் அஸிஸ்ஐ கொல்ல முயற்சித்ததாக நியுயோர்க் ரைம்ஸ் நாளிதழ் தெரிவித்த குற்றச் சாட்டிற்கு, லிபிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் கைது செய்யப்பட்டிருக்கும் ரகுமான் அல்மெளடி விசாரணையில், தெரிவித்தவற்றை மேற்கோள்காட்டி இளவரசரை மோட்டார் பவனியின் போது தாக்கியளிக்க திட்டமிட்டதாகவும், இதில் லிபிய அதிபர் கேணல் கடாபிக்கு பங்கிருந்ததாகவும் இப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இச்செய்தி தொடர்பாக, லிபிய வெளிநாட்டமைச்சர் அல்-ரகுமான் சால்கம் கருத்து வெளியிடுகையில், இச்செயதி எந்த விதமான ஆதாரமுமற்றதெனவும், தனது நாடு எந்த பயங்கரவாதச் செயலுக்கும் துணை போகாது எனவும் கூறினார்.

நோபல் பரிசுக்கு மலேசிய தமிழர்

இயற்கை மருத்துவத்துறையில் மேற்கொண்டிருக்கும் ஆராச்சிகளுக்காக மலேசியாவை சேர்ந்த பேராசிரியர் ஆனந்தன் கிருஸ்ணன் என்ற தமிழர் நோபல் பரிசுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

53 வயதான ஆனந்தன் ஆறு வருடங்களாக இம்மருத்துவத்துறையில் மேற்கொண்ட ஆராச்சியின் பயனாக புதிய மருந்துப்பொருட்கட்கான செய்முறைகளை அறிவித்துள்ளார்.

வடஅமெரிக்கா, மற்றும் கனடாவை சேர்ந்த நிறுவனங்களே ஆனந்தனை இப்பரிசுக்கு சிபாரிசு செய்துள்ளன.

கரி பொட்டர் புதிய திரைப்படத்தின் சாதனை

பிரித்தானியாவில் திரையிடப்பட்ட 3 நாட்களில் மட்டும் 11.5 மில்லியன் பவுண்ட்ஸ் வருமானம் பெற்றதன் மூலம் வசூலில் அதன் முந்திய திரைப்படங்களை முறியடித்துள்ளது அண்மையில் வெளிவந்த "த பிறிசினர் ஒப் அஸ்க்கபான்" என்ற கரி பொட்டர் கதைப் புத்தகங்களை தழுவிய மூன்றாவது திரைப்படம்.

மெக்சிக்கோவை சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் அல்போன்சோ குவாரன் என்பவரால் இயக்கப்பட்டிருக்கும் இத்திரைப்படத்தில் டானியல் ரெட்கிளிப், கரி பொட்டர் வேடமேற்று நடித்துள்ளார்.

பிரான்சில் முதல் நாள் காட்சிகளை 510,000 ரசிகர்கள் கண்டுகளித்துள்ளதாக பிரபல திரைப்பட நிறுவனமான வோனர் பிரதர்ஸ் அறிவித்துள்ளது.

அங்கிகாரமற்ற மென்பொருள் பாவனையாளருக்கு கதவடைப்பு

அனுமதியற்ற பிரதிபண்ணப்பட்ட வின்டோஸ் எகஸ்பி (Windows XP) மென்பொருள் பாவனையாளர்களுக்கு தொடர்ந்தும் உதவப்போவதில்லை என அறிவித்துள்ளது அதன் தயாரிப்பாளரான மைக்கிரோ சொப்ட்.

இந்த வேனில் காலத்தில் வெளியிடத் திட்டமிட்டிருக்கும் எகஸ்பிக்கான மெருகூட்டும் துணைப்பதிப்பு (Service Pack 2) இவ்வாறான பிரதிகளால் இயங்கும் கணணிகளில் தொழில்படாது என இந்நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விசேட மென்பொருள் அண்மைக்காலத்தில் பாவனையாளர்களை அலைக்கழிக்கும் வைரஸ் தொல்லைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேட்டோ மாநாட்டை புற்றின் புறக்கணிக்கின்றார்

துருக்கியில் நடைபெறவிருக்கும் நேட்டோ நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுத்த அழைப்பை ரஸ்சிய அதிபர் விளாடிமிர் புற்றின் ஏற்க மறுத்துள்ளார்.

நேட்டோ பேச்சாளர் ஜேம்ஸ் அப்பாத்துரை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கருத்துப்படி, புற்றின் கலந்துகொள்ளாமை நூறு சதவீதம் உறுதியாகிவிட்டாலும், இதுவரை மறுப்புக்கான காரணமெதுவும் உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

போலியோ தடைமுறைக்கு பொற்சுவானாவில் எதிர்ப்பு

பொற்சுவானாவில் இயங்கும் அப்பொஸ்தலே தேவனின் சபை என்ற கிறிஸ்தவ அமைப்பு, அரசால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கும் போலியோ தடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஐந்து வயதுக்குட்பட்ட 200,000 பிள்ளைகளுக்கு தடுப்பு ஊசி செலுத்தும் நடைமுறையானது தங்களது மதமுறைமைக்கு எதிரானது எனத்தெரிவித்திருக்கும் இவ் அமைப்பினர், மாறாக பிரார்த்தனைகள் முலம் நோய்களை தீர்க்கலாம் என நம்புகின்றனர்.

நமக்கென்றோர்
மொழி
நமக்கென்றோர்
பண்பாடு
நமக்கென்றோர்
நாடு
நமக்கென்றோர்
தொலைக்காட்சி
0208 100 0000
ttn

மலரின் மகிமை:

கிங்கை கிருஷ்ணன்

சில மலர்களின் மருத்துவ குணங்கள் பற்றி அறிந்த நமக்கு, தற்செயலாக ஒரு மருத்துவ இதழ் மூலம் நிறைய மலர்களின் மகத்துவம் தெரிய வந்தது.

முருங்கைப்பூ: பித்தம் நீக்கும். வாந்தி குணமாகும். கண்கள் குளிர்ச்சி அடையும். காம உணர்வு அதிகமாக்கும்.

செந்தாழம்பூ: தலைவலி தீரும். கபம், ஜலதோசம், வாத நோய் ஆகியவை அகலும். உடலுக்கு அழகு அளிக்கும்.

செவ்வகஸ்திப்பூ: உடற்சூடு, மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் போன்ற நோய்களை குணமாக்கும்.

அகத்திப்பூ: பீடி, சிகரெட், சுருட்டு, உக்கா போன்றவற்றை பிடிப்பதால் ஏற்படுகின்ற விச கூட்டையும், பித்தத்தையும், வெயிலினால் உண்டாகும் சூட்டையும் நீக்கும்.

வாளைப்பூ: கசப்பு சுவையுடைய இப்பூவினால் உண்டாகும் சூட்டையும் நீக்கும்.

இலுப்பைப்பூ: நல்ல சுவையுடைய இப்பூவினால் பாம்பு விஷம், வாத நோய் குணமாகும்.

மரியம்பூ: மலையை சார்ந்த காட்டில் முளைக்கும் இப்பூவினால் பித்த நோய், சுவையின்மை வாந்தி ஆகியவை தீரும்.

மாதுளம்பூ: அதால் பித்தம், ஏப்பம், வாந்தி, இரத்த மூலம் ஆகிய நோய் நீங்கும். இரத்தம் மிகுதியாகும்.உடலுக்கு ஊட்டம் அளிக்கும்.

நொச்சிப்பூ: நாட்பட்ட பூவினால் ஏற்பட்ட சுவையின்மை, மலப்புழுக்கள், நாக்கு நோய்கள் ஜன்னி ஆகிய நோய்கள் தீரும்.

பனம்பூ: பல் நோய், சிறுகட்டு, வாத சூன்மம்,நாட்பட்ட சுரம் ஆகியவை தீரும்.

புன்புருக்கம்பூ: குருதக கட்டு, மாத விலக்கு தடை நீங்கும்.

வாழைப்பூ: சீதபேதி, இரத்தமூலம், பால்வினை நோய், வெள்ளைப்பாடு, இருமல், உடற்சூடு, வைகல் எரிச்சல் ஆகியவை குணமாகும். விந்து விருத்தியாகும்.

தென்னம்பூ: பால்வினை நோய், வெள்ளை ஒழுக்கு, உடலில் உள் கொதிப்பு, இரத்த போக்கு, விஷக்கடி நோய்கள் நீங்கும்

குருக்கத்திப்பூ: கசப்பும், இனிப்பும் சுவையுள்ள இப்பூவினால், தலைநோய், தாகம், கபம், புண், பித்தம், பல்வகை விஷக்கடி ஆகியவை குணமாக்கும். அழகுக்காவும், ஆராதனைக் காவும் மட்டுமே பூக்கள் என்று பலர் நினைக்கி றார்கள். பச்சிலைப் போல பூக்களும் நோய் நீக்கும் மருந்துகளாக ஆயுர்வேதத்திலும் யுனானி வைத்தியதிலும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது.

பொதுவாக நம் பெண்கள் கூந்தலில் நிறைய மலர்களை சூடிக்கொள்வதைக் காணலாம். இது பெண்களுக்கு அழகை தந்தாலும், அதிலும் ஒரு மகத்துவம் அடங்கியுள்ளது. இன்று விஞ்ஞானம் கண்டதை, அன்று மெய்யானம் நடைமுறைப் படுத்தியது.

இன்று பெண்கள் தலைக் குளித்தால் கூந்தலை மின்காந்த சுட்டிலில் உலர வைக்கிறார்கள். இந்த மின்காந்தம் கூந்தலை உதிரிவைப்பதுடன், மூளையையும் நாளடையில் பாதிப்புற செய்கிறது. மூளையின் அணுக்களை மெல்ல, மெல்லச் சாகடிக்கிறது.

மலருக்கு இயற்கையான ஒரு தன்மையுண்டு. பஞ்சினைப் போல் ஈரத்தை உறிஞ்சும் தன்மையுண்டு. கூந்தலில் நிறைய மலர்களை சூடும்போது, கூந்தலிளுள்ள ஈரத்தினை ஈர்த்துலிடுகிறது. அதோடு கூந்தலுக்கு அழகையும் தருகிறது.

இப்போது ஆறு அடி கூந்தல் மறைந்து, 6' ஆறு அங்குலக் கூந்தலாகிவிட்–து. அதற்கேற்றாற் போல் 6' மலர் சரம் தொங்குவதைக் கண்டு மகிழதான் வேண்டும். மணப்பெண்ணுக்கும், ஆடவரை மயக்க நினைக்க பெண்ணுக்கும் மல்லிகை ஒரு வரப்பிரசாதம். மல்லிகை மணம் பட்டாலே மன்மதனும் மயங்கி விடுவானே! நமது சம்பரத்தின் பண்பாட்டின் அன்றாட வாழ்க்கையில், ஆடை அணிகளில், வாழ்க்கை முறைகளில் நாம் இயற்க்கையோடு இயந்துத்தான் வாழ்கிறோம்,

மல்லிகை பூ: இல்லறதில் ஆர்வமுண்டாக்கும். கபம், கண் மயக்கம், உடற்சூடு, குறையும். உடலுக்கு குட்டை அளிக்கும். அதிகப் பால்சுரப்பால் அவதியுறும் பெண்கள் இப்பூவை மார்பில் மூன்று நாட்கள் கட்டி வந்தால் பால்சுரப்பு குறையும்.



பன்னீர் பூ: வாந்தி, நாக்கில் சுவையின்மை, விந்து விரைப்பம், தண்ணீர் தாகம், உடற்சூடு ஆகியவை தீரும்.

பந்தாரப்பூ: உடல் கொதிப்பு நீங்கும். கண்கள் குளிர்ச்சியடையும். உடலும் குளிர்ச்சியடையும்.

பகிழம்பூ: இதனை முகர வாந்தி நிற்கும்.உடலிலுள்ள அனல் நீங்கும். புணர்ச்சியின் மீது ஆசையுண்டாகும்.

பன்னைப்பூ: கரப்பான், சொறி, சிரங்கு, பால்வினைநோய் ஆகியவை நீங்கும். ஆனால், பித்த மயக்கம் ஏற்படும்.

பாதிரிப்பூ: பித்த சுரம் நீக்கும். வெள்ளை போக்கு நிற்கும்.

பன்னீர் குங்குமப்பூ: மூக்கடைப்பு ஜலதோஷம், காது நோய், கப-பித்த நோய்கள் நீங்கும்

கண்டங்கத்திரிப்பூ: வாத பித்த நோய், எலும்பு காய்கள், பால்வினை நோய், விந்துவிரையம் ஆகியவை தீரும். வாசனை மனமகிழ்ச்சியினை உண்டாக்கும்.இந்தப் பூக்களை நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி நீங்கும்

சிகான்றைப்பூ: சர்க்கரை நோய், குடல்வலி, மலப்புழுக்கள் யாவும் ஒழியும். காட்டாத்திப்பூ: சீதபேதி, இரத்த பேதி, பால்வினை நோய் குணமாகும். செடியின் மலர் வகை.

தும்பைப்பூ: தாகம், கண் நோய்கள், ஜன்னி மோத சுரம் யாவும் தீரும்.

கருங்குவளைப்பூ: கபநோய், மூக்கடைப்பு, தலைவலி, வாந நோய் போன்றவைகள் குணமாகும்.

செம்பருத்தி பூ: வெட்டைச் சூடு நீங்கத் தினமும் காலையில் வெறும் வயிற்றில் சுத்தம் செய்யப்பட்ட பூவைச் சாப்பிட்டு வரலாம்.

களாப்பூ: கண்களைத் தாக்கும் கரும்படலம், வெண்படலம்,ரத்தப் படலம்,சதைபடலம் போன்ற கண் நோய்களை அகற்றும்.

அலரிப்பூ: பித்தம், உடற்சூடு, சொறிசிரங்கு, புண் இரத்தம், தலையில் நமைச்சல் ஆகியவை நீங்கும்.

அகத்திப்பூ: எலும்புகளையும் பற்களையும் வளரச் செய்யும், சுண்ணாம்புச் சத்து அகத்திப்பூவில் அதிகம் இருக்கிறது. கனரண சக்திகும் மலச்சிக்கலை நீக்கவும் உதவும்.இம்மலரை தாராளமாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

அல்லிப் பூ: நீரிழிவை நீக்கும். புண்களை ஆற்றும்.வெப்பச் சுட்டால் ஏற்படும் கண் நோய்களைத் தீரும். இதை சர்பத் செய்து சாப்பிடலாம்.

இலுப்பைப் பூ: 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை' என்று சொல்லப்படுவது இனிப்புத் தன்மையா லேயே! இலுப்பைப் பூவைச் சர்க்கரையுடன் சேர்த்து அரைத்துக் காய்ச்சிய பாலுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் வலிகள் குறையும். உடல் களைப்புத் தீரும் இருமல் குறையும்.விரை வீக்கத்திற்கும் இந்த மலரை வதக்கி ஒத்திடம் கொடுக்கலாம்.

கண்டங்கத்திரிப் பூ: மூல நோய்க்கு இந்தப் பூ கைகண்ட மருந்து. வாதுமை நெய்யில்கண்டங் கத்திரிப் பூக்களைப் போட்டுக் காய்ச்சி மூலம் உள்ள இடத்தில் தடவி வர, மூல நோய் குணமாகும்.

குங்குமப் பூ: பலவிதமான நோய்களைப் போக்குவதில் குங்குமப் பூ, தன்னிகரற்று திகழ்கிறது.தலைவலி கண் நோய் காதுநோய் சுரம் ஆகிய நோய்களை இந்தப் பூ குணப்படுத்தும்.கர்ப்பிணி பெண்கள் ரோஜா இதழ்களுடன் சாப்பிடலாம். பசும் பாலிலும் காய்ச்சி பருகலாம். குடல் புண்களுக்கு இது உதவும். சிகப்பான குழந்தை பிறக்கும் என்பது மட்டும் உண்மையில்லை.

சங்கங்கிப் பூ: காய்ச்சிய பசும்பாலில் இந்தப் பூவைப் போட்டு சாப்பிட்டு வந்தால் உடல் திடகாத்திரம் பெறும்.

சூரிய காந்திப் பூ: இந்தப் பூவிலுள்ள விதைகளியிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் பலம் அளிப்பதுடன் நோய்களுக்கு நன்மையளிக்கும்.

தாழம் பூ: இதில் தைலம் எடுக்கலாம். தலைவலி, வாதவலிக்கு இத்தையலாம் வெகுவாக பயன் அளிக்கும்.

வெள்ளை தாமரைப் பூ: ஈரலில் ஏற்படும் சூடு, ஒவ்வாத மருந்தின் துன்பம், உடலில் உண்டாகிற எரிச்சல் யாவும் தீரும்.

தாமரை பூ: இதயத்திற்க்கு பலமளிக்கும்.உடல் வெப்பத்தை நீக்கித் தாது எரிச்சலை தவிர்த்து இரத்த நாளத்தையும் சீர்செய்கிறது.

நொச்சிப் பூ: இதனை அரைத்துத் தடவி வந்தால் சிரங்குகள் குணமாகும்.

முருங்கைப் பூ: காய்ச்சியப் பாலில் இப் பூவைப் போட்டு தினம் சாப்பிட்டு வந்தால் தாதுப் பலம் ஏற்படும்.

வாழைப் பூ: இதில் சாறு எடுத்து அதனுடன் புணுங்கற்கண்டு சேர்த்துப் பருகி வந்தால் பெண்களை வருத்தும் பூர்துவலி நீங்கும்.

வேப்பம் பூ: இது சிறந்த கிருமி நாசின் வயிற்றுப் பூச்சிக்களை ஒழிக்கும். அடிக்கடி வரும் ஏப்பத்தை நிறுத்தும். வயிறு சுத்தமாகவும், பித்தம் போக்கவும் தொண்டைப் புண் ஆறவும் காது இரணம் நீங்கவும் இப் பூ கைக்கண்ட மருந்து.

வெங்காயப் பூ: இதைச் சமைத்துச் சாப்பிட்டால் வயிற்று வலி நீங்கும்.

தூதுவளை பூ: உடல் மிக்க பலம் பெறும். வித்து பெருகும். உடல் அழகு பெறும்.

'தமிழ்' செம்மொழியாக அறிவிக்கப்பட்டமைக்கு கோடி நன்றி - கலைஞர் மு.கருணாநிதி

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டால் இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்த் துறைகள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று திமுக தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டால் உடனடியாக இந்தியப் பல்கலைக்கழக மானியக் குழு அதை ஏற்கும். அதன்பின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ்த் துறை தனித் துறைகளாக உருவாகும்.

தமிழ் மொழி, தமிழகக் கலை, இலக்கிய ஆய்வுகள் முனைப்பாக நடைபெறும்.

இந்தியப்பல்கலைக்கழகமானியக் குழு தமிழைச் செம்மொழியாக ஏற்றால், உலகப் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் அதை ஏற்கும்.

தமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் உலக அளவில் தன்மதிப்பு உயரும். பன்னாட்டு மொழிக் கலைக் களஞ்சியங்களில் தமிழ் இலக்கியங்கள், கட்டுரைகள், வரலாறு, பண்பாட்டுக் கருத்துகள் இடம் பெறும்.

பல்கலைக்கழகங்களில் தற்போது தமிழ்மொழி கீழ்த்திசைமொழி என்று கருதப்படுகிறது. இந் நிலை மாறி இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உலகப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழிக்குத் தனி இருக்கை நிறுவப்படும். அந்த துறைகள் தனித்தன்மையுடன் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

சம்ஸ்கிருதத்திற்கு இந்திய அரசு நேரடியாக ரூ.40 கோடியும், அரசு சார்பு நிறுவனங்கள் மூ?லம் ரூ.30 கோடியும் ஒதுக்கி, அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவி வருவது போல் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உதவி கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டிலும், இந்திய நாட்டிலும் பரந்துவிரிந்து கிடக்கும் கல்வெட்டாய்வு, ஓலைச்சுவடி ஆய்வுகள் சம்ஸ்கிருதத்தை மையப்படுத்தியே ஆராயப்படுகின்றன. இந்த நிலையில் தமிழ் மொழியை மையப்படுத்தி உண்மையான வரலாற்று பண்பாட்டுக் கருத்துகள் வெளிவர முடியும்.

அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு வேகமூட்டும் வகையில் மேலும் பல திட்டங்கள் வகுத்துச் செயல்பட வாய்ப்பு ஏற்படும்.

இந்திய மொழிகளில் மட்டும் அல்லாது ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் தமிழ் இலக்கியங்களும், நவீன படைப்புகளும் மொழி பெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவும்.

தமிழ் செம்மொழியாக்கப்பட வேண்டும் என்று 1965ல் மாநிலங்களவையில் அண்ணா குரல் கொடுத்தார். 1996ல் திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் தமிழையும் இந்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைப்பின்பற்றி 2000வது ஆண்டு மார்ச் மாதத்தில் அப்போதைய பிரதமர் வாஜ்பேயிக்கு திமுக அரசின் முதல்வர் என்ற வகையில் கடிதம் எழுதினேன்.

செப்டம்பர் 2003ல் விழுப்புரத்தில் நடந்த திமுக மாநாட்டிலும் இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உலகில் உள்ள 600 முக்கிய மொழிகளில் இலக்கிய, இலக்கணம் உடையவை 300. இதில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடையவை தமிழ், சீனம், சம்ஸ்கிருதம், லத்தீன், ஹிப்ரூ, கிரீக். இதில் லத்தீனும், ஹிப்ரூவும் செத்துப்போன மொழிகள். ஹிப்ரூவுக்கு உயிரூட்டும் முயற்சியில் இஸ்ரேல் அரசு ஈடுபட்டுள்ளது. கிரீக் மொழி தற்போது புதுவாழ்வு பெற்று வருகிறது. சம்ஸ்கிருதத்துக்கு என்றுமே பேச்சு வழக்கு இருந்ததில்லை. எழுத்து வழக்கு மட்டுமே உண்டு.

இதுகுறித்து கருத்து தெரிவிக்க தமிழறிஞர்கள் குழு நியமிக்கப்பட்டது. அக் குழுவின் கருத்துரை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்துக்கு மத்திய அரசு அக் கருத்துரையை அனுப்பியது. அந்த நிறுவனம் தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்கலாம் என்ற பரிந்துரையுடன் அதை மத்திய அரசுக்கு அனுப்பியது.

1998ல் சென்னைப் பல்கலைக்கழக, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திமுக ஆட்சிக் காலத்தில் தமிழ் செவ்வியல் மொழி என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். 1918லேயே சைவ சித்தாந்த மகா சமாஜம் நடாத்திய மாநாட்டிலேயே தமிழைச் செவ்வியல் மொழியாக அறிவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் 1919லும், 1920லும் இதேபோன்ற தீர்மானங்களை நிறைவேற்றியது.

2003 ஏப்ரல் 8ல் திமுக, பாமக, மதிமுக கட்சிகளின் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய பிரதமர் வாஜ்பேயியைச் சந்தித்து இந்தக் கோரிக்கை குறித்து மனு அளித்தனர்.

2003 ஆகஸ்ட் 18ல் நாடாளுமன்றம் எதிரே தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தினர்.

இப்போது எட்டாவது அட்டவணை மொழிகளை மத்திய ஆட்சி மொழிகளாக்கிட ஆய்வு நடக்கும் என்றும், தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்படும் என்றும் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையில் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறியுள்ளார்.

இதற்காக அவருக்கு ஒரு கோடி நன்றி தெரிவித்துக் கொள்வதாக கருணாநிதி கூறியுள்ளார்.

பல்லாயிரம் கண்கள் இதனை மேயும் . . .

இழந்த உறவுகள்

புதுக்குடியிருப்பு, தமிழீழம்

முள்ளிவாய்க்காலை வதிவிடமாகக் கொண்ட இளையதம்பி இராசேந்திரம் கடந்த ஆனி மாதம் 4ம் நாள் காலமானார். இவர் காலம் சென்ற திரு. திருமதி இளையதம்பி தெய்வானை இணையரது மகனும் பரமேஸ்வரியின் வாழ்க்கைத் துணைவரும் ஆவார். இவ்வறிவித்தல் குறித்த விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். வர்ணன் 020 8697 5512.

பாஷையூர், தமிழீழம்

பாஷையூரைச் சேர்ந்த திருமதி பிலிப்பையா செபஸ்தியம்மா கடந்த ஆனி மாதம் 8ம் நாள் காலமானார். இவர் காலம் சென்ற ஆசீர்வாதம் பிலிப்பையாவின் அன்பு மனைவியும் டேவிற், காலம் சென்ற எட்வேட், ராணி, மரியசீலி, ஞானசீலி, பிலிஸ்ரியா, கிளி, அன்ரன் ஜோசப், ஜெநோவா, அமிர்தகரன், அல்போன்சா, றொபின், ஜுதீஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கடந்த புதன்கிழமை 16ம் நாள் புனித கொஞ்சென்சி மாதா சேமகாலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தல் குறித்த விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம். ஜுதீஸ் 07951 662 105

உடுவில், தமிழீழம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் தம்மளை, அளவெட்டி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் சனிக்கிழமை (12.06.2004) இரவு காலமானார்.

அன்னார் நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசமணி, அன்னம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மங்கையர்க்கரசி, இராமச்சந்திரன் (ஜேர்மனி), சந்திரா தேவி, பராசக்தி (சுவிஸ்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), சிவசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கடந்த (16.06.2004) புதன்கிழமை அளவெட்டி முள்ளானை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

சரவணை, தமிழீழம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் வைரவப்புயலியங்குளம் வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட தாமோதரம்பிள்ளை சதீஸ் ஆனி மாதம் 5ம் நாள் இரவு அகாலமரணமானார்.

இவர் தாமோதரம்பிள்ளை, தவமணி தம்பதிகளின் அன்பு மகனும் சுகிதா (ஜேர்மனி) சுரேஸ் (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோரனும் தவேந்திரன் (ஜேர்மணி) அவர்களின் அன்பு மைத்துனரும், கிஷாந்தினி, கஜன், சோபிதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னதரின் இறுதிச் சடங்கு 8ம் திகதி செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நயினாதீவு, தமிழீழம்

நயினாதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சிவக்கொழுந்து ஆனி மாதம் 8 ம் நாள் வவுனியாவில் காலமானார். அன்னார், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும், சதானந்தன் (சுவிஸ்) ஒங்காரநாதன் இலண்டன் மாசிலாமணி (வவுனியா) தியாகு (பிரான்ஸ்) காலஞ்சென்ற நேமிநாதன், கருணா (பிரான்ஸ்) மோன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயராணி, சுபத்திராதேவி, புஸ்பரெத்தினம், இரத்தினேஸவரி, இந்திராணி, சுகந்தி, நித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 12.06.2004 சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது. எனவே இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

உடுத்துறை, தமிழீழம்

வேம்படி உடுத்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிராசா தெய்வானைப்பிள்ளை ஆனி மாதம் 11 ம் நாள் அவரது 72 வது வயதில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிராசா அவர்களின் அன்பு மனைவியும் சரஸ்வதி (இந்தியா) சிறீஸ்கந்தராஜா, முத்துராஜா, யோகராணி (இலங்கை), சின்னப்பு (நோர்வே), பரமானந்தராஜா (டென்மார்க்), பார்வதி இந்திரா (இலங்கை), பாலராஜா (இலண்டன்), சௌந்தரராஜா (நோர்வே), ஆகியோரின் அன்புத்தாயாரும். சபாரட்னம், மணி, வள்ளிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, பத்மாவதி, செல்வஜெயந்தி, கோபாகிருஸ்ணசாமி, றெஜீனா ஆகியோரின் அன்பு மாமியாவார்.

வண்ணார்பண்ணை, தமிழீழம்

சிவகுரு பொற்கொடி அவர்கள் ஆனி மாதம் 13 ம் நாள் 20 பெரியதம்பிரான் கோவிலடி வண்ணார்பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் சிவபாதமடைந்தார்

இவர் காலம் சென்ற நாகலிங்கம் சிவகுருவின் அன்பு மனைவியும். காலம் சென்றவர்களான நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும். இரத்தினம் காலம் சென்ற சரஸ்வதி, ஜெகதீஸ்வரி பிரான்ஸ்சில் வசிப்பவர்களான சற்குணவதி, கைலாசபிள்ளை, சுந்தர்லிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும்.

காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கவடிவேல், பிரான்ஸ்சில் வசிப்பவர்களான மார்க்கண்டு, அசோகமலர், ரதிதேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.06.2004 திங்கக்கிழமை காலை ஈமைக்கிரியை நடைபெற்று கோம்பையன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இலவச சேவை!

நீங்கள் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவுகள் யாராவது அண்மையில் காலம் ஆகி இருந்தால் அவற்றை எமக்கு அறிவியுங்கள். எம்மக்களின் நலன்கருதி இப்பகுதியில் அவ்வறிவித் தல்கள் இலவசமாகப் பிரசுரிக்கப் படும். விவரங்களை எழுதி அனுப்பவேண்டிய தொலைப்படி எண்: 020 8640 6972, தொலைபேசி எண்: 020 8640 4004

கவிதை

காதல்

காதல் என்ற சொந்தத்திற்கு
உலகையே எதிர்த்திட புறப்படும் துணிச்சல்
காதலை வேராக்கி கனவுகள் மரமாகி
கவிதைகள் பூக்களாகி உதிர்ந்திட்ட சருகுகள்
காதல் ஒரு வழிப்பயணம்
கனவுகள் அதில் வாகனம்
நினைத்திடத்தான் தெரியும்
மறந்திட உயிர் பிரியும்

நாளேடு

உன்னைப் போலவே எனக்கும்
வயதாகிவிட்டது
உன் வயதுக்கு ஆண்டொன்றுக்கு
நீ புத்தாண்டு என்று போர்வை
போர்த்தி நிற்கிறாய்
என்வயதுக்கு நான்
முதிர்கன்னி ஆகிறேன்...

காதல் கடிதம்

படித்துப் படித்துப் நெஞ்சம் பரிதவித்து போனது
நினைத்து நினைத்து நெஞ்சம் சுக சுமைதாங்கியானது
நினைக்க நினைக்க சுகமான நினைவுகளில் பரியாறி
நீந்துகின்றேன் கனவுலகில் உன்னால் தான்
சந்தோசக் கனவுகளில் மிதக்கவைத்து
கடிதங்களில் மடக்கிவிட்ட
ஓ! என் இனிய காதலா...
நானாக நானில்லையே இப்போ....

- கவிதா

கண்ணாடி

உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும்
நீ எப்போதும் உண்மை பேசுவதனால்
என் தலையில் ஓரிரு நரை முடி
அதையும் காட்ட நீ தவறவில்லை...

மனச்சேறு

பாதையில் மழைக் கால நீர்க்கோலம்
உன் ஆடைதூக்கிப் போகிறாய்
என் மனம் அப்போ சேறானது....

. . . . . .

ஆறு நடந்து திரிந்து வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட, வான்
ஏறி உயர்ந்த மலை ஏதும் இல்லையே
என்ற ஒரு கதை சொல்வதுண்டு-
'ஏறி உயர்ந்த மலை இல்லை ஆயினும்
என்ன? இருந்தன தோள்கள்' என்றே
கூறி, உழைத்த பின் ஆறிக் கலைகளில்
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்!

யாழ்ப்பாணம் அளவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட மகாகவி என்று அறியப்பட்ட உருத்திரமூர்த்தி ஏராளமான கவிதைகளையும் காவியங்களையும் பாநாடகங்களையும் எழுதி உள்ளார். குறும்பா முதலான பரிசோதனை முயற்சிகளும் இவரிடம் உண்டு. 1927இல் பிறந்த இவர் 1971இல் காலம் ஆனார்.

யாழ்ப்பாணம்

- மகாகவி

யாழைக் கொணர்ந்திங்கு மீட்டிய தால், ஒரு
யாசகன் மன்ன னிடம் இருந்தோர்
பாழைப் பரிசு பெற்றான் எனக் கூறிடும்
பண்டைப் பழக்கத்தை கேட்டதுண்டு-
பாழைப் பரிசு பெற்றாலும், அப்பாலையைப்
பச்சைப் படுத்திப், பயன் விளைத்து,
வாழத் தொடர்ந்து முயன்றதனால், இன்று
வையத் துயர்ந்தது யாழ்பாணம்!
ஆழக் கடலுள் ஆமிழ்ந்தன வே எங்கள்
அன்றைப் பெரும்புகழ்? ஆதலினால்,
வீழத் தொடங்கி முடிந்தன வாம் பல
விந்தை என்றோர் என்றோர் கதை
வந்ததுண்டு-
வீழத் தொடங்கிய விந்தை முழுவதும்
மீட்டுக் கொடுத்த பெருமையிலே
ஈழத் தமிழகம் என்று நிலம் தனில்
இன்று நிமிர்ந்தது யாழ்ப்பாணம்!

ஒளிகொண்ட அன்பு

குண்டடி பட்டொரு தேசம் - இன்று
குற்றுயி ராகக் கிடக்குது பாரீர்!
கண்ட இடமெல்லாம் குண்டை - ஒரு
கருத்தின்றி இறைத்திடும் விந்தையைப் பாரீர்!
அண்டை நாடுகள் எதிர்க்க - பல
ஆயிரம் ஆயிரம் மக்களும் தடுக்க
மண்டை விறைத்தவ ரானார் - சிலா
மனித நேயத்தை மறந்துமே போனார்

அன்பை உணர்த்துமா யுத்தம்? - பல
ஆயிரம் உயிர்களை அழித்திடும் யுத்தம்
தன்னலம் பேணிடும் யுத்தம் - ஒரு
தனிஇனம் இல்லாமற் போக்கிட யுத்தம்
கன்னியர் தவித்திட யுத்தம் - அவர்
கனவுகள் எல்லாம் சிதைத்திடும் யுத்தம்
சின்னஞ் சிறார்களில் இரத்தம் - பலர்
சித்திர வதைப்பட்டுச் செத்திடும் யுத்தம்

கலிகாலம் இங்கு பிறந்ததோ? - எங்கும்
கரிகொண்ட தேசத்தை யுத்தம் கொடுத்ததோ?
அழித்திட எரித்திட மகிழும் - ஓர்
அவாக்கொண்ட அரக்கனாய் மாறியே விட்டதோ?
பலிஒன்றும் வேண்டாம் எமக்கு - இனி(ப்)
பாவங்கள் பகைமைகள் வேண்டவே வேண்டாம்
ஒலிஒன்றே கேட்டிட வேண்டும் - அது
ஒளிஒன்றால் அன்பென்று உதித்திட வேண்டும்.

- திருப்பரங்குன்றன்

இன்று இல்லெங்கிலும் நாளை

- சண்முகம் சிவலிங்கம்

எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன.
எங்கள் இமைகள் கவிந்துள்ளன.
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன.
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்.

எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக.
எங்களை நீங்கள் வண்டியிற் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக.
எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்.

தாழ்ந்த புருவங்கள் ஓர்நாள் நிமிரும்.
கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிதுடிக்கும்
கண்டிய பற்கள் ஒருநாள் நறநறக்கும்.

அதுவரை எங்களை நீங்கள் ஆள்க.
அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக.

(1940-) கிழக்கிலங்கையிலுள்ள பாண்டிருப்பு என்னும் கிராமத்தில் பிறந்தவர். விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

1960களில் இருந்து கவிதை எழுதிவரும் இவர் பல சிறுகதைகளும், பிரசுரமாகாத இரு நாவல்களும் எழுதியுள்ளார். இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் பலவும் எழுதியுள்ள இவர், பிறமொழிக் கவிதைகள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்தும் உள்ளார்.

மரணத்துள் வாழ்வோம் தொகுப்பில் இடம் பெற்ற சண்முகம் சிவலிங்கம் அவர்களது இந்தக் கவிதையினையே மணிரத்னம் தனது கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் நாயகன் மாதவன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுவதாக அமைத்துள்ளார்.

ஆயிரம் பூக்கள் மலரட்டும்

அதுதான் எங்கள் விருப்பம்
ஆயிரம் பூக்கள் மலரட்டும்
அத்தனையும் கவிதைப் பூக்களாக இருக்கட்டும்
கவிதை எழுதத் தெரிந்தோரே
இது உங்கள் களம். ஆயிரம் ஆயிரமாய்
கவிதைகளை எழுதுங்கள். அத்தனையையும்
எங்களிடம் அனுப்பி வையுங்கள்
அவற்றின் தரம் கண்டு - இந்தப் பக்கத்தில்
ஒரு பூவாக அது மலர்ந்திருக்கும்.
நல்ல கவிதைகள் என்று நாம் நம்புகின்ற
சில கவிதைகளைப் பிரசுரித்துள்ளோம்.
அவற்றைக் காணுங்கள்
கவனத்தில் எடுங்கள்
ஆனால் அப்படி எழுதினால்தான் கவிதை
அதைத்தான் பிரசுரிப்பார்கள் என்று எதுவும்
எண்ணி விட வேண்டாம்
நல்ல கவிதைகளை இனம் காட்டுவதற்காக
அதனைப் பிரசுரிக்கின்றோம்.
ஆனால், நீங்கள் கவிதை எழுதுங்கள்
அது இந்தப் பக்கத்தில் இடம் பிடிக்கும்.

SHADE Engineers

(Qualified and Trained)

For any domestic Plumbing, Heating and Electrical Works
Advice and Free Estimate, Competitive Rates
Any time. No call out charges. Call Bala
on: 020 8689 4160 Mob: 07957 154 538

வைரமுத்து

ஏ.ஆர். ரகுமான்

மணிரத்னம்

இவர்களல்ல

விரைவில்

மௌனமாக உன்னைத் தொடுமே

சிறுகதை

கொக்கென்று நினைத்தாயோ . . . .

சந்திரவதனா.

சொல்லப் படாது. இந்த மனுசனுக்கு ஒண்டும் சொல்லப்படாது.

அப்பிடித்தான் எப்பவும் நினைக்கிறனான்.

ஆனாலும்....எங்கை....? சில நேரத்திலை பொறுமை கெட்டுப் போயிடுது.

எத்தினைக் கெண்டுதான் நானும் பொறுமை காக்கிறது?

காலைமை எழும்பினதிலை யிருந்து ஆற அமர நேரமில்லை. வேலை.

ம்....கூம் வேலை எண்டு மட்டும் இந்த மனுசன்ரை காது படச் சொல்லக் கூடாது.

உடனை என்னப்பா உனக்கு இஞ்சை வேலை....?

ஊரிலை மாதிரி என்ன இங்கையும் கல்லிலை அடிச்சு உடுப்புத் தோய்க்கிறியளோ....? அல்லது

ஆட்டுக் கல்லிலையும் அம்மியிலையும் அரைக்கிறியளோ....? அல்லது அடுப்பைத் தன்னும் பச்சை விறகை வைச்சிட்டு ஊதி ஊதி எரிக்கிறியளோ....? எண்டு பன்மையிலை கேட்கத் தொடங்கீடும்.

எனக்கு வரும் கோவம். ஊரிலை என்ன மிக்சி இல்லையோ? அல்லது எலெக்றிக் குக்கர்தான் இல்லையோ? வாய்க்கு வசதியாக ஏதும் சொல்லேலுமெண்டால் எதையும் சொல்லலாமெண்டு நினைக்குது இந்த மனுசன்.

நானும் சொல்லுறதெண்டால் சொல்லுவன்.

நீங்கள் மட்டுமென்ன....? ஊரிலை எண்டால் சைக்கிளைத்தான் தூக்கிக் கொண்டு வெளிக்கிடுவியள்.

இங்கை எண்டால் கார் இல்லையெண்டால் ஒரு அடி எடுத்து வைக்க மாட்டியள். அது மட்டுமே-விறகு கொத்துறது, தண்ணி அள்ளிக் கொண்டு வாறது.... எண்டு எத்தினை வேலையள் அங்கை உங்களுக்கும். இங்கை அப்பிடியே சாமான்கள் வேண்டுற வேலையையும் பொம்பிளையளின்ரை தலையிலை போட்டிட்டு, நான் என்ரை மனுசிக்கு சுதந்திரம் குடுத்திருக்கிறன் எண்டுவியளே! உங்கடை சுதந்திரக் குடுப்பனவு பற்றி எங்களுக்குத் தெரியாதாக்கும்.

வேலைக்குப் போறதும், சாமான் வேண்டப் போறதும் தான் பெண் விடுதலைக்கான அர்த்தம் எண்டு நீங்களெல்லாருமா ஒரு அகராதியே தயாரிச்சு வைச்சிருக்கிறீங்களே!

ம்....இதையெல்லாம் சொல்லுறதிலை ஏதும் பிரயோசனமிருக்கே! அதாலைதான் நான் எப்பவும் நினைக்கிறதோடை நிப்பாட்டிப் போடுவன். சொல்லுறேல்லை.

சரி அதை விட்டிட்டு இப்ப பிரச்சனைக்கு வருவம்.

நான் காலைமை எழும்பி வரவே போர்வை சோபாவிலை அப்பிடியே குழம்பின படி போட்டுக் கிடக்கு. எனக்கு உடனையே எரிச்சல் வந்திட்டுது. நேற்றிரவு இந்த மனுசன்தான் போர்த்திக் கொண்டு படுத்திருந்து ரிவீ பார்த்துக் கொண்டிருந்தது. எழும்பிப் போகேக்கை போர்வையையும் எடுத்துக் கொண்டு போய் மடிச்சு வைக்கலாம்தானே. அதில்லை அப்பிடியே போர்வையை விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது.

ஏனப்பா நீங்கள் இன்னும் சின்னப் பிள்ளையே....? உங்களுக்கு எத்தினை தடவை சொல்லிப் போட்டன். இந்தப் போர்வையை எடுத்து வைச்சால் குறைஞ்சு போயிடுவிங்களே? நாவுற்றுக்குக் கழிச்ச மாதிரி ஏன் எப்பவும் கோலுக்குள்ளை போர்வையை வைக்கிறிங்கள்?

எண்டு கேட்க வந்த வார்த்தைகளை அப்பிடியே தொண்டையோடை நிப்பாட்டிப் போட்டன்:.

பிறகு மனுசன் சொல்லும் விடியக் காத்தாலை தொடங்கீட்டாய் எண்டு. சும்மா சொன்னாலும் பரவாயில்லை. தன்ரை பிழையை மறைக்கிறேக்காண்டி நாய்க்கத்தல் கத்தத் தொடங்கீடும்.

எனக்கு அந்தக் கத்தலை கேட்கவே ஏலாது. எனக்கு மட்டும் என்ன விடியக் காத்தாலை இல்லையே? எனக்கும் விடியக் காத்தாலை இந்த மனுசன் அப்பிடிக் கத்தினால் மூட் அவுட்டாகும்தானே. ஆனால் மனுசன் நினைக்குது தனக்கு மட்டுந்தான் விடியக் காத்தாலை, வேலைக்களைப்பு, பஞ்சி, அலுப்பு எல்லாம் இருக்கெண்டு. எனக்கும் இதெல்லாம் இருக்கெண்டு இந்த மனுசன் நினைச்சுப் பார்த்ததாவே தெரியேல்லை.

போர்வை மட்டுந்தான் பிரச்சினை யெண்டால் தூக்கி மடிச்சு வைச்சிட்டு இருந்திடுவன். எல்லா விசயத்திலையும் அப்பிடித்தான். பேப்பரை விரிச்சு வாசிச்சா மடிச்சு வைக்கிறேல்லை. புத்தகத்தை புத்தக அலுமாரியிலையிருந்து எடுத்தா திருப்பிக் கொண்டே வைக்கிறேல்லை.... உப்பிடியே இந்த மனுசனும், பிறகு மனுசனைப் பார்த்து பிள்ளையளும் வீட்டிலை விதைச்சு விடுற சாமான்களெல்லாத்தையும் எடுத்து அந்தந்த இடத்திலை வைக்கவே எனக்கு ஒரு நாளிலை அரைவாசி போயிடும். அதுக்குள்ளை மனுசன் கேட்கும் உனக்கென்ன வேலை...? எண்டு.

காலைமை எழும்பினதிலை யிருந்து வேலை எண்டெல்லே சொன்னனான். அதுதான் போர்வையை மடிச்சு வைக்கிற திலை தொடங்கி ஒண்டொண்டா எல்லாத்தையும் அடுக்கி வைச்சு, சமைச்சு .... மற்ற வேலையளையெல்லாம் முடிச்சு.... நான் வேலைக்கு வெளிக்கிடக்கிளை அப்பிடியே வீடு பளிச்செண்டு இருந்திச்சு. எனக்கு அதைப் பார்க்கவே ஒரு சந்தோஷம்.

அந்த சந்தோஷத்தோடையே வேலைக்குப் போயிட்டன்.

வேலைக்குப் போனால் வேலை செய்யோணும் தானே. ஆனால் என்ரை மனுசன்ரை நினைப்பு, தான் மட்டும்தான் வேலையிடத்திலை வேலை செய்யிறது. நான் எண்டால் சும்மா இருந்திட்டு வாறதெண்டு. சரி ஏதோ நினைச்சிட்டுப் போகட்டும்.

எனக்கு வேலை முடிஞ்சால் நிம்மதி. இனி வீட்டை போகலாமெண்டு.

அப்பிடித்தான் வேலை முடிய நிம்மதியா வீட்டை வந்தன். அதையேன் பேசுவான். பளிச்செண்டு நான் விட்டிட்டுப் போன வீடு என்னைப் பார்த்து இளிக்கிற மாதிரி....எல்லாம் தலை கீழாய். மேசையிலை புத்தகங்கள், பேப்பருகள், கடிதங்கள்.... குசினிக்குள்ளை ஒரு குவியல் கோப்பையள்....

கட்டிலுக்குப் பக்கத்திலை சுருட்டின படி மனுசன்ரை சொக்ஸ்....

மனுசன் சோபாக்குள்ளை சுருண்டபடி அந்தப் போர்வையாலை போர்த்திக்கொண்டு பேசாமல் படுத்திருந்து ரிவீ பார்க்குது.... மனுசனுக்கு வேலைக்களைப்பு அதுதான். எனக்கு வந்துதே கோபமும் எரிச்சலும். கூட்டித் துடைச்சு அடுக்கி வைக்கத்தான் முடியேல்லை. அடுக்கினதுகளையாவது குழப்பாமல் இருக்கலாம்தானே.

ஆனால் நான் ஒண்டுமே சொல்லேல்லை. மனசுக்குள்ளை குமைச்சலாத்தான் இருந்தது. ஆனாலும் பேசாமல் மனுசனுக்கு தேத்தண்ணியை போட்டுக் குடுத்திட்டு - தேத்தண்ணியை உடனை போட்டுக் குடுக்காட்டி மனுசன் பிறகு மூஞ்சையை நீட்டிக் கொண்டு இருக்கும். எனக்கு இருக்கிற குமைச்சலும் எரிச்சலும் போதும். இன்னும் கூட்ட வேண்டாம் எண்டிட்டு அந்த வேலையை உடனை செய்திட்டு.... பிள்ளையள் சாப்பிட்டுதுகளோ குடிச்சுதுகளோ எண்டு பார்த்து.... இண்டைக்கு என்ன படிச்சது.... வெளியிலை என்ன நடந்தது.... எல்லாம் கேட்டு முடிச்சிட்டு.... பழையபடி அடுக்கல் கூட்டல் துடைத்தல்.... எண்டு எல்லாம் முடிய 11 மணியாச்சு. காலும் வேலை விட்ட போலை நோகத் தொடங்கீட்டுது. சரி இனி இண்டைக்கு ஒண்டும் செய்யேலாது படுப்பம் எண்டு நினைச்சுக் கொண்டு போனால் ரிவீ தன்ரை பாட்டிலை போய்க் கொண்டிருக்கு.... அது மட்டுமே!!. பழைய படி போர்வை சோபாவிலை....

மனுசன் நைசா அதை அப்பிடியே விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது போலை....

எனக்கு வந்துதே கோபம். விறுவிறென்று போய் படுக்கையறையைப் பார்த்தன். மனுசன் ஒய்யாரமாப் படுத்திருந்து புத்தகம் வாசிக்குது.

சொல்லப்படாது எண்டுதான் முதல்லை நினைச்சனான். ஆனால் என்னையறியாமல் பொறுமை கெட்டுச் சொல்லிப்போட்டன்.

ஏனப்பா அந்தப் போர்வையை எடுத்து வைக்கிறதுக்கென்ன....?

எத்தினை தரமெண்டு உங்களுக்குச் சொல்லுறது....!

நான் சொல்லி முடிக்கேல்லை. மனுசன் இரவெண்டும் பாராமல் பொரிஞ்சு தள்ளிச்சே.

நீ என்னத்துக்குப் பெண்டாட்டியெண்டு இருக்கிறாய்? எடுத்து வைக்கிறதுதானே!

மனுசருக்கு இருக்கிற பிரச்சனையள் தெரியாமல்... உனக்கு இப்ப போர்வைதான் பிரச்சனையாக்கும்.

எனக்குத்தானே முதலே பொறுமை கெட்டிட்டு. நானும் விடேல்லை.

என்னப்பா உங்களுக்கு அப்பிடிப் பிரச்சனை. எண்டு கேட்டிட்டன்.

என்ன இவள் இப்பிடி பதில் சொல்லேலாத கேள்வியாப் பார்த்துக் கேக்கிறாளே எண்டு நினைச்சுதோ என்னவோ - மனுசனுக்கு வந்துதே ஒரு கோபம். அப்பிடியே முழுசி என்னை ஒரு பார்வை பார்த்திச்சு.

ஏதோ தான் பெரிய கௌசிக முனிவர். அவற்றை பார்வையிலை நான் எரிஞ்சு சாம்பலாயிடுவன் எண்ட நினைப்பு.

என்னை என்ன கொக்கெண்டு நினைச்சியோ கொங்கணவா...?

எண்டு கேக்கத்தான் எனக்கு மனம் வந்திச்சு.

ம்....பிறகேன் பிரச்சினையை வளர்ப்பான் எண்டிட்டு பேசாமல் வெளிலை வந்திட்டன்.

மனுசன் நினைச்சிருக்கும் தன்ரை பார்வேலை நான் பயந்திட்டனெண்டு.

Palm Beach Restaurant

9 years
Catering Experience

Finest Sri Lankan &
South Indian Cuisine

Vegetarian & Non- Vegetarian

Specialists in Catering for
wedding & Parties
Available for Private Parties
(please book in advance)

10%
Discount
on Take Away

Open Noon to Midnight

Fully Licensed

17 Ealing Road, Wembley, Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664 Mob: 07939 587 338

அறுவைப் பக்கம்

கருணாவுடன் நேர்காணல்

இன்று நகரில் சூ(வீ)டு பறக்கும் வியாபாரம் Estate Agents தான். எங்கு பார்த்தாலும் "வீடு வாங்க விற்க" அழையுங்கள். இன்று இவைதான் ஊடகங்களின் வயிறு நனைக்கும் விளம்பரங்கள். இவர்களை நம்பியே இன்னும் பல ஊடகங்கள் புதிதாக தோன்றலாம். வீடு வாங்குதல் என்பது அத்தியாவசியத் தேவை என்பதையும் கடந்து Fashion ஆகி விட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. என்றாலும் ஆரோக்கியமான Investment Fashion. இவர்களில் யாரையாவது சந்திக்க வேண்டும்போல் தோன்றியது. அவசரத்திற்கு அகப்பட்டவர்கள் இவர்கள் தான்(அதற்காக பிஸி இல்லாதவர்கள் என்று பொருள் அல்ல.)

Ding Dong Estate Agents

வீடு விற்பனை முகவர் கருணா கோபாலபிள்ளை மற்றும் வீட்டுக்கான கடனுதவி பெற்றுக் கொடுக்கும் சிவா இரத்தினசிங்கம் இருவரையும் சந்திக்கின்றோம். வழக்கமான பத்திரிகைத்தனமான கேள்விகளில் இருந்து விடுபடுவதாக எண்ணிக் கொண்டு நாம் கேட்ட கேள்விகளும் அவர்களுடைய பதில்களும்.

சந்திக்குச் சந்தி Estate Agents விளம்பரங்கள். விளம்பரங்களை நம்பித்தான் நீங்கள் தொழில் செய்கின்றீர்களா?

நிச்சயமாக இல்லை (நமக்குள் ஏதோ செய்ய... தொடங்குகின்றார் கருணா) ஆனாலும் (அப்பாடா பாலை வார்த்தார்) நாம் தொழிலில் இருப்பதை அடிக்கடி வியாபார உலகுக்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கின்றது. (இந்த நினைப்பை மறக்காமல் இருந்தால் சரி)

பலத்த போட்டிகளுக்கு மத்தியில் நீங்கள் இலாபம் ஈட்டுகின்றீர்களா? அது எப்படி...நிறை வாக இருக்கின்றதா?

ஆமாம்... நட்பு ரீதியான சேவையை பெற்ற வாடிக்கையாளர்கள் எம்மை எங்கும் எடுத்துச் செல்கின்றார்கள். (அப்ப நாங்கள் இல்லையா) எனவே நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

உங்களைப் போல் Estate Agents ஆட்கள் பலரும் மிக (மிக, மிக) விலை உயர்ந்த வாகனங்களையே உபயோகிக்கின்றார்கள். உங்கள் பவிசினைக் காட்டவா... இல்லை வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காகவா...?

(சிரிக்கின்றார். துருவி ஆராய்ந்ததில் செயற்கைத் தனம் ஏதும் இல்லை) நிச்சயமாக வாடிக்கையாளருக்காகத்தான்.... வீடுகளைக் காட்ட அழைத்துப் போகையில் அவர்களுக்கான வசதியான பயணம். அத்துடன் எம் வியாபாரம் மீதான ஒரு ஈர்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். (Car Loan சமாச்சாரங்களை கண்டு கொள்ளக் கூடாது) (அநியாயத்துக்கு வீடு பார்க்கப் போகிறவர்கள் இனியாவது இவர்களின் வாகனச் செலவு பற்றி கவனிக்க வேண்டும்) Estate Agents ஆட்கள் இப்போதெல்லாம் ஒன்று வாங்கினால் மற்றொன்று இலவசம் (நிச்சயமாய் வீடு அல்ல) என்பது போல விளம்பரப்படுத்துகின்றார்களே...? அது என்ன ஏந்த சலுகைகளும் இல்லை என பகிரங்கமாக விளம்பரம் செய்திருக்கின்றீர்கள் ? (என்ன துணிச்சல்)

2 மில்லியனுக்கு வீடு வாங்குகின்றவருக்கு 200 பவுண்ஸ் பரிசுப் பொருள் வழங்கப்படும் என்ற விளம்பரம் கவர்ச்சியானது. ஆனாலும் நாம் இதில் இருந்து மாறுபடுகின்றோம். ஒவ்வொரு வீடு விற்கப்படுகின்றபோதும் தாயகத்தில் பாதிக்கப்படும் வறிய மாணவர் ஒருவரைப் பராமரிக்கும் பொறுப்பை எம் நிறுவனம் எடுத்துக்கொள்கின்றது. இதன் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளரும் ஒரு நிறைவை அடைகின்றார். எமது இத்தகைய செயற்பாட்டிற்காகவே (இதை சேவை என்றும் சொல்லலாம்) பல வாடிக்கையாளரும் எம்மை அணுகுகின்றனர். வாடிக்கையாளருக்கான எந்தத் தனிப்பட்ட சலுகைகளும் எம்மிடம் இல்லை. ஆனால் ஒருவர் ஒரு வீடு வாங்குகையில் தமிழீழத்தில் ஒரு வறிய மாணவனின் வாழ்க்கை மேம்படுகிறது. (அசந்தீட்டீங்கப்பா. இவர்களுக்கு ஒரு விழா எடுத்து ஒரு விருது வழங்கலாமோ?).

ஒரு நிறுவனத்தின் கீழ் நீங்கள் இருவர் பணிபுரிவது ஒரு மாறுபாடான விளம்பரம் (பெரும்பாலும் ஒரு Estate Agent முகவராக ஒருவரே விளம்பரப்படுத்துவார்) அதன் நோக்கம் என்ன?

வீடு வாங்குதல் என்றால் Mortgage பிரச்சனைகளும் இணைந்தே இருக்கும். ஒரே கூரையின் கீழ் இரண்டு சேவைகளும் வழங்கப்படுகின்றன. (அலைச்சல் மிச்சம். வாகனச் செலவையும் கட்டுப்படுத்தலாம்).

(வழக்கமான பத்திரிகைப் பாணியில்) இறுதியாக இத்தால் வாடிக்கையாளருக்கு சொல்ல விரும்புவது என்ன...?

எம்மிடம் வீடு வாங்கும் வாடிக்கையாளருக்கு எந்த சலுகையும் வழங்கப்படமாட்டாது. நட்பான சேவை தவிர.

எடக்கு முடக்கான கேள்விகளாக இருந்தாலும் பல்லைக் கடிக்காமல் பதில் சொன்ன..... கருணா, சிவா இருவருக்கும் நன்றியைக் கூறிக் கொண்டு புறப்படுகையில் அவர்களின் Business Cards சிலவற்றையும் எடுத்துச்செல்கின்றோம். மனதில் இவர்களின் சேவை பற்றிய எண்ணமே ஓடுகின்றது. லண்டனில் அத்தனை வீடு விற்பனை முகவர்களும் இப்படி ஒரு திட்டத்தைக் கடைப்பிடித்தால் அடேயப்பா... எத்தனை தாய் தந்தையரை இழந்த வறிய மாணவர்கள் ஏற்றம் கண்டிருப்பார்கள்.

இனியும் செய்யலாம்.?

வருகிறார்கள் ஜக்குபாய்ஸ் !

ரவுசுபாண்டி

இரண்டு, மூன்று ஹிரோக்கள் சேர்ந்து நடிப்பதுதான் இப்போ ஃபேஷன். 'ஆய்த எழுத்து' சூர்யாரு மாதவன்ரு சித்தார்த் போல இன்னொரு மெகா புராஜெக்ட் தயாராகிறது கோலிவுட்டில்!

படம் வாட்டர் பாய்ஸ் ரஜினி விஜயகாந்த் சரத்குமார் என செம காம்பினேஷன். இந்த அதிரடிப் படத்தின் டிஸ்கஷன் இதோ..

சரத்குமார்: வாட்டர் பாய்ஸ்ங்கிற பேரே படு ஒல்டா இருக்கு முதல்ல பேரை மாத்தலாமே

கே.எஸ் (மெதுவாக): எடுத்ததுமே டென்ஷன் பண்றாங்களே... (சத்தமாக) பேசாம விக்ரு பாய்ஸ்னு மாத்திரலாமா சார் கொஞ்சம் மெச்சூர்டா இருக்கும்..

ரஜினி: ஓகேதான் ரவி. பேர், பணம், புகழ் எல்லாம் பார்த்தாச்சு. மக்கு பாய்ஸ்னு கூட வெச்சுக்கலாம். ஆனா, பாபாஜிகிட்ட ஒரு வார்த்தை சொல்லி, பில்லி சூனியம் இல்லாத பேர்தானானு செக் பண்ணிக்கணும்??

கே.எஸ்: ஓகே... ஓகே... கதை சொல்றேன். ரஜினி டாஸ்மாக்குல தண்ணி சப்ளை பண்ற பாய், விஜயகாந்த் தண்ணி லாரியில் கிளீனர் பாய், சரத்குமார் பஸ் ஸ்டாண்டுல வாட்டர் பாக்கெட் விற்கிற பாய்.

ரஜினி: லவ்லி. ஏய், ஏய்... லைய்ல தண்ணியை நீ அடிப்பே... பார்ல தண்ணி உன்னை அடிச்சுடும்..! அளவா குடிச்சா சாந்தி... அத்து மீறினா வாந்தி..! இடத்தைக் காலி பண்ணு... இல்லேன்னா, உன்னை நாங் காலி பண்ணிடுவேன்னு எனக்கு ஃப்ரெஷ்ஷா டயலாக் வேணும் ரவி... அப்படியே பிரஸ்மீட் வெச்சுரலாம

கே.எஸ்: என்னது.. பிரஸ்மீட்டா சார், இது பட டிஸ்கஷன் சார்..

விஜயகாந்த்: ரஜினிக்கு எதுக்கு டயலாக்? அதெல்லாம் நான் பார்த்துக்கறேன். ரவிக்குமார், நீங்க ஆர்.டி.ஓ. ஆபீசுக்கு உடனடியா ஒடிப்போய், இந்தியாவிலே மொத்தம் எத்தனை லாரி ஓடுது.. குறிப்பா தண்ணி லாரி எத்தனை, அதோட டாங்க் கொள்ளளவு என்னன்னு எல்லா தகவல்களையும் வாங்கிட்டு வாங்க... புள்ளி விவரங்களா போட்டுத் தாக்கி, அதுல அரசியல் மெசேஜ் சொல்லலாம். கூடவே, 'குளியல்' தமிழ்ல எனக்குப் பிடிக்காத வார்த்தைனு சொல்லி, குளிச்சுட்டு வர்ற வளையெல்லாம் கும்மியெடுத்துத் தண்ணீர் சிக்கனத்தை வலியுறுத்துற மாதிரி ஒரு ஸீன் பண்ணிரலாம்!

சரத்: இப்போ படத்துல நான்தான் யூத்! படம் முழுக்க பேர்பாடியோட நான் வர்றேன். ரஜினி வித்த டுப்ளிகேட் சரக்கைக் குடிச்சுட்டு வந்து, பஸ் ஸ்டாண்டுல ரகளை பண்ற மொள்டிகளை வெளுத்தெடுத்து, 'நீ குடிச்சது டுப்ளி கேட்... நான் அடிச்சது ஒரிஜினல்' னு நான் ஷகலாம் பேசினா, படம் சில்வர் ஜூப்ளி! வெற்றிக்கனியை தலைவர் கால்ல கொண்டு போய் சமர்ப்பணம் பண்ணிடலாம்.!

ரஜினி: ஹா...ஹா..! நான் 'டுப்ளிகேட்டா' சரத், நீங்க இப்ப என் நண்பர்கிட்ட இருக்கீங்க. அதனால, உங்களைப் பத்தி இதுக்குமேல பேசப் போறதில்லை. ஆண்டவா, வாட்டர் பாக்கெட் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று... குவார்ட்டர் பாட்டில் எதிரிகளை நான் பார்த்துக் கொள்கிறேன்!னு ஒரு பஞ்ச் டயலாக் போட்டு விளம்பரம் கொடுத்துரலும் ரவி..

கே.எஸ்: மொதல்ல கதை.... ஆங்! டாஸ்மாக்ல சரக்கடிக்க வர்ற கவுன்சிலர் ஒருத்தர், கட்டிங் அடிச்சுட்டு காசு தராமப் போயிடறான். ரஜினி அவரைத் தட்டிக் கேட்டுப் பாட்டி எடுக்கறார். உடனே மக்களெல்லாம் ரஜினியை அரசியலுக்கு வா, வானு கூப்பிடறாங்க. ஆனா ரஜினி, இன்னிக்கு வி.எஸ்.ஓ.பி. விக்கறேன். நாளைக்கு வி.ஐ.பி. ஆவேனானு தெரியாது. இப்ப எம்.சி. ஊத்தறேன். நாளைக்கு எம்.பி. ஆவேனானு தெரியாதுனு டயலாக் விடறார்.

ரஜினி: மைகாட்... இதெல்லாம் வேணாம்பா! மீடியாவுல தப்பு தப்பா எழுதிடுவாங்க. இப்ப பாருங்க... என் வோட்டு இரட்டை இலைக்குத்தான்?னு சொன்னேன். உடனே ரஜினி இரட்டை இலைக்கு வோட்டுப் போட்டுட்டார்?னு ஊகம் பண்ணி ஏதேதோ கன்னா பின்னானு எழுதிட்டாங்க. அச்சச்சோ... எப்படியெல்லாம் எழுதறாங்க தெரியுமா ரவி

விஜயகாந்த்: ஹலோ, இந்த கிளீனர் பாய் எப்படி அரசியலுக்கு வர்றான்

கே.எஸ்: விடிய விடியப் பேசி முடிவெடுத்து, விடிஞ்சதும் மூணு பேரும் அரசியல்ல குதிக்கிறீங்க...

ரஜினி: இது வேண்டாமே... விடிஞ்சதும் எங்கிருந்தோ அந்த ஊருக்கு வர்ற ஒரு அழுக்குமூட்டை சாமியார்... அதுவும் நான்தான்! தண்ணிப் பஞ்சம் கர்மவினை... புண்ணியமே நீர்ச்சுனைனு சொல்லிக்கிட்டே ஒரு இடத்துல குச்சியால கோடு போடறார். அங்கே தோண்டிப் பார்த்தா... கற்கண்டு மாதிரி தண்ணி! உடனே அந்தச் சாமியாரை விழி, சரத் உட்பட எல்லோரும் அரசியலுக்குக் கூப்பிடறாங்க. அவரு சிரிச்சுக்கிட்டே திருவோட்டைத் தூக்கிக் காட்டி, இது எனக்குப் போதும்னு ஸ்டில் அவுட்ல அடிவானத்தைத் நோக்கி நடக்கிறார். 'எ ஃபிலிம் பை அருணாசலா கிரியேஷன்ஸ்'... எப்படி?

இலண்டனில் மலிவு விற்பனை

இலண்டன் மாநகரம் காணாத மலிவு விற்பனை. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய இதயம், மூளை, நுரையீரல், சிறுநீரகம், மற்றும் சிறுவர், பெண்களுக்கான மேலும் பல உறுப்புகள் 50% தள்ளுபடி விலையில் கிடைக்கின்றது. ஜூன் 20,21,22,23,24ல் ஒரு புதிய இதயம் வாங்குபவருக்கு ஒரு சோடி கண்கள் இலவசம். கட்சன் உடலுறுப்பு விற்பனை நிலையம். 549 கட்சன் வீதி. இலண்டன்.

முக்கிய குறிப்பு: பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டப்படி, மூளைவாங்கவரும் வாடிக்கையாளர்கள், தமது பழைய மூளையை ஆகக் குறைந்தது 5 வருடமாவது பாவித்திருக்க வேண்டும். அத்துடன் தம்முடன் துணைக்கு ஒருவரை அழைத்து வரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தமிழ் இளைஞர் சாதனை

சீக் வட்டாரத்தில் ஆரப்பிக்கப்பட்ட தமிழ் சங்கத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட தமிழ் எழுதும் போட்டியில் பங்குபற்றிய உயர் வகுப்பு தமிழ் மாணவன் பேர்மிங்காமன் முறையே அஆஇ என்னும் மூன்று தமிழ் எழுத்துக்களையும் சரியாக எழுதித் தங்கப் பதக்கத்தை வென்றார். இவர், பலதசாப்தங்களுக்கு முற்பட்டகாலங்களில் இலண்டன் இளைஞர்களுக்கு ஆற்றிய தமிழ்ப் பணியால் தமிழ்த்தாத்தா எனப் பட்டம் பெற்ற தமிழறிஞர் மாறனின் பேரனாவார். பேர்மிங்காமன் அவர்கள் இந்த வெற்றியைப்பற்றிக் கூறுகையில் என்னுடைய இளமைப் பிராயத்திலேயே, தமிழ் மீது மிகவும் பற்றுக்கொண்டு எடுத்த விடா முயற்சியே இந்தச் சாதனைக்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

அகதிகள் இருவர் சீனன்குடாவில் கைது

அகதிகள் இருவர் சீனன்குடா விமான நிலையத்தில் கைது. அண்மைக் காலங்களில் இலண்டனில் இருந்து அகதிகளாக வெளியேறுவோர் தொகை அதிகரித்து வருகின்றது. ஜேர்மனி பிரான்ஸ் இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும், இனங்களுக்கிடையிலான பூசல்களும், வறுமையும் பெருமளவு மக்களை அகதிகளாக வெளியேறத் தூண்டுகின்றன. இந்தியா, சிறீலங்கா, தமிழீழம் போன்ற 'ஷெல்'வந்த நாடுகளுக்கே கூடுதலானோர் விரும்பிச் செல்கிறார்கள். அந்த நாடுகளின் வாழ்க்கை வசதிகளும், 'ஷெல்'வச் செழிப்புமே இதற்குக் காரணமாகும். அத்தோடு அரை நூற்றாண்டுகளுக்கு முன் இந்நாடுகளிலிருந்து, குறிப்பாக தமிழீழத்தில் இருந்து அகதிகளாக வந்தவர்களின் வழித்தோன்றல்களோ தமது பெற்றோரின் தாயகத்தை நோக்கி அகதிகளாகச் செல்கிறார்கள். அவ்வாறான அகதிகளில் இருவரே டயனத்தின் போது சீனன்குடா விமானநிலையத்தில் வைத்து அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து போலியாகத் தயாரிக்கப்பட்ட தமிழீழ நாட்டுக் கடவுச்சீட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

ரஜினி பேட்டி

யாருக்குமே நான் பயந்தது கிடையாது!

ஈமீபத்தில் நடந்த இந்தியப் பொதுத்தேர்தலின் தமிழ்நாட்டுக் களத்தில் தேர்தல் விதியை மாற்றுவேன் எனத் தன்னை நம்பியிருந்த ரஜினிகாந்த் தலைகுப்புற விழுந்தார்.

விழுந்தாலும் தனது மீசையில் மண் படவில்லை என்று குமுதம் இதழுக்கு வழங்கிய பேட்டியிலிருந்து.

கேள்வி : தேர்தலுக்கு பிறகு கருணாநிதியுடன் பேசினீர்களா?

பதில் : இல்லை. மந்திரியானவர்களுக்கெல்லாம் வாழ்த்து சொன்னேன். ஜெயிச்சவங்களை பாராட்டுவதுதானே நியாயம்.

கேள்வி : டாக்டர் ராமதாஸ் உடனான மோதல் எப்படி உள்ளது?

பதில் : இந்த தேர்தலில் வீசியது ஒரு பெரிய அலை. ஆலமரம் கூட இதில் அடிச்சுகிட்டுதானே போயிருக்கும். டாக்டர் ராமதாசை பொறுத்தவரையில் ஜனநாயக ரீதியாக நாங்கள் காட்டிய எதிர்ப்பு! மதுரையில் என் ரசிகர்களை அந்த மாதிரி தாக்கினதற்கு அப்புறம் பேசாமல் இருந்திருந்தா நான் ஆம்பிளையே கிடையாது. இப்ப நான் ஏன் பேசினேன்னு கேட்கிறவங்க அப்ப நான் பேசாமல் இருந்திருந்தால் அப்பவும் ஏன் பேசலைன்னு கேட்டிருப்பார்கள். வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும். இதுதான் சமுதாயம்.

கேள்வி : பாபா படத்திற்கு பா.ம.க காட்டிய எதிர்ப்பு எல்லோருக்கும் தெரியும். இப்போது 6 தொகுதிகளிலும் அவர்கள் ஜெயித்திருக்கும் நிலையில் உங்கள் ஜக்குபாய் படத்தை மேலும் வேகமாய் எதிர்ப்பார்களே? என்ன செய்வீர்கள்?

பதில் : சரி. 2006ல் தேர்தல் வருது. இதைவிட வேகமா நாம் செய்யறோம். காமராஜர் மாதிரி பெரிய தலைவர்களெல்லாம் தோற்று போயிருக்காங்க. அதுக்கு முன்னாடி ரஜினிகாந்தெல்லாம் ஒன்றுமே கிடையாது. தேர்தல்ங்கிறது என்ன? பாஸா பெயிலா? அவ்வளவுதான். பாஸாகிவர்களுக்கு வாழ்த்துக்கள். ஜக்குபாய்க்கு அவங்க பிரச்சினை பண்ண மாட்டாங்கள்னு நினைக்கிறேன். பாபா படத்துல சிகரெட் பிடிக்கிறது பிரச்னைன்னு சொன்னாங்க. இதுல என்ன பண்ணிட முடியும்? ஆயிரம் சினிமா டிக்கெட் ஒரு ஓட்டுக்கு சமம். அந்த மாதிரி பல ஓட்டுக்களை இழக்கிற அளவுக்கு ராமதாஸ் விவரம் இல்லாதவர் இல்லை. ஜனங்க பார்த்துக்கிட்டு இருக்காங்க. சினிமா இண்டஸ்ட்ரியும் சும்மா பார்த்துக்கிட்டு இருக்காதுன்னு நினைக்கிறேன். நீதிமன்றம் இருக்கவே இருக்கு.

கேள்வி : உங்களுக்கும் ராமதாசுக்குமான மோதல் தொடரும்னு நினைக்கிறீர்களா?

பதில் : கலைஞர் அவர்கள் இந்த விஷயத்துல பெரிய உதவி பண்ணியிருக்கார். எனக்கும் ராமதாசுக்குமான பிரச்னை வேறு வடிவத்துல போயிருக்கலாம். தேர்தல் நேரத்துலேயும் அதற்கு அப்புறம் எல்லா தரப்பிலேயும் அமைதி இருந்ததுன்னா அதற்கு கலைஞர் முக்கிய காரணம். நான், டாக்டர் ராமதாஸ் இரண்டு பேருமே அதுக்காக அவருக்கு நன்றி சொல்லணும்.

கேள்வி : தி.மு.க, அ.தி.மு.க இது இரண்டு மட்டும்தாங்கிற ஆதங்கம் ஜனங்ககிட்ட நிச்சயம் இருக்கு. மூன்றாவது இடம் ரொம்ப நாளாவே வெற்றிடமா இருக்கு. நீங்க அதை எதிர்காலத்துல நிரப்புவீங்களா?

பதில் : சுத்தி, சுத்தி மறுபடியும் அங்கேயே வர்றீங்களே. நான் ஏற்கனவே சொல்லிட்டேனே. கடவுள்கிற முதலாளி ஆர்டர் போடும்போது இந்த தொழிலாளி செஞ்சுதான் ஆகணும். எதுவும் நம் கையில இல்லை.

கேள்வி : கருணாநிதி, அவரைச் சார்ந்தவர்களை நண்பர்கள்ன்னு எடுத்துக் கொள்ளலாமா?

பதில் : கலைஞர் மிகச் சிறந்த மனிதர். நண்பர்னு எல்லோருக்கும் தெரியும். வேறு யார் பெயரைச் சொல்வதற்கும் இஷ்டமில்லை.

கேள்வி. ஸ்டாலின் மகள் திருமணத்திற்கு உங்களுக்கு அழைப்பு வந்ததா?

பதில் : வந்தது. ஆனா முறையா வரலை. அரசியல் வேற. சுப காரியம் வேற. எனக்கு முறையா அழைப்பு வந்திருக்கலாம்!

சினித்துளி

வசூலுக்கு வரும் ராஜா

சரண் இயக்கும் ஜெமினி லேபிளின், வசூல்ராஜா எம்.பி.பி.எஸ். ஒரு முழுநீள நகைச்சுவைப்படம். மருத்துவம் பயிலும் ஒரு ரௌடியைப் பற்றிய கதையாம். கமலுடன் பிரபு, பிரகாஷ்ராஜ் கருணாஸ், தலைவாசல் விஜய், சினேகா என்று பெரிய நட்சத்திரப்பட்டாளமே இடம் பெற்றிருக்கும் இப்படத்தில், இளம் புயல் தனுஷ் கூட ஒரு பாடல் காட்சியில் நடிக்கிறார். வரும் சுதந்திரத் தினத்தன்று வந்து விடுவாராம் இந்த ராஜா.

நம்மவர் சினிமா

சூர்யா

இலண்டனில் வாழ்கின்ற ஈழத்துக் கலைஞர்களின் முயற்சியில் சூர்யா என்ற தமிழ்த் திரைப்படம் திரைக்கு வர தயாராக உள்ளது. இலண்டனில் வாழ்கின்ற ஈழத்தவரான சிறிஸ்காந்தன் இத்திரைப்படத்தை தாயாரித்திருக்கின்றார். ஈழத்தவரான சுரேஸ் கிருஸ்ணா நாயகனாக நடித்திருக்க நிழல்கள் ரவி, பாபிலோனா முதலான தமிழக நடிகர்களும் அதில் பங்கேற்றிருக்கின்றார்கள். இசையினை வேதம் புதிது புகழ் தேவேந்திரன் அமைத்துள்ளார். எஸ். பாலாவின் இயக்கத்தில் அமைந்தவன் இந்த சூர்யா.

மெதுவாக உன்னைத் தொட்டு

கனேடிய தமிழ்த் திரைப்பட முயற்சிகள் ஓரளவு கொர்த்துள்ள நிலையில் அதன் அறிகுறியாக கொலிவூத்துள்ள திரைப்படம் மெதுவாக உன்னைத் தொட்டு. இத்திரைப்படத்தின் ஒலி, ஒளி, இயக்கம் ஆகிய பொறுப்பினை ரவி அச்சுதன் மேற்கொண்டுள்ளார். கனடாவில் திரையிடப்பட்டிருக்கும் இந்திரைப் படம் விரைவில் இலண்டனில் திரைக்கு வருகின்றது.

சந்தர்ப்பம்

இலண்டனில் தயாரிப்பு வேலைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்ட திரைப்படம் சந்தர்ப்பம். இன்னும் பிண்ணனி இசைச்சேர்ப்பும், பிண்ணனிக்குரல் சேர்ப்பும் சென்னையில் நடைபெற உள்ளது. பல கொலைகள் அடுத்தடுத்து நிகழ்கின்ற மர்மத்திரைப்படமாக சிறந்த தொழில்நுட்ப தேர்ச்சியுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றது இத்திரைப்படம். சந்தர்ப்பம் திரைப்படத்தின் தொழில் நுட்ப தேர்ச்சி இந்திய திரைப்படங்களுக்கு குறியாக, மணிரத்னம், ஷங்கர், ராம் கோபால் வர்மா போன்றோரின் திரைப்படங்களுக்கு இணையாக அமைந்திருப்பது வியப்புக்குரியது. இதன் திரைக்கதை, ஒளிப்பதிவு, இயக்கம் முதலானவற்றை நந்தா ஏற்றிருக்கின்றார். நந்தாவின் திறமைக்கு ஒரு சபாஷ்.

கமல் பேட்டி

நான் மட்டும் மகரிஷியாக இருக்க வேண்டுமா?

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள குஷல்தாஸ் கார்டனில் வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் படப்பிடிப்பில் இருந்தார் கமல்ஹாசன்.

அன்றைய தினத்துக்கான படப்பிடிப்பு முடிந்ததும் கமலை சந்தித்தபோது இன்முகத்துடன் வரவேற்றவர், தினமணிக்கு அளித்த சிறப்புப் பேட்டி:

வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் படத்தை நான் செய்வதற்குக் காரணம், இப்படத்தின் தயாரிப்பாளர், எல்.வி. பிரசாத்தின் பேரன். இயக்குநர் சரண் ஆகியோர் தான். ஜெமினி லேப் நிறுவனத்தார் எனது நண்பர்கள்.

வசூல்ராஜா எம்.பி.பி.எஸ் கூட அந்த நம்பிக்கையுடன் எடுக்கப்பட்டு வரும் படம். சகலகலா வல்லவன் போன்ற ஒரு படம் இது.

இதில் எனது தந்தை வேடத்தில் பாலசந்தரை நடிக்கக் கேட்டோம். ஆனால் தற்போது நடிக்க முடியாத நிலை இருப்பதாகத் தெரிவித்தார். அந்த வேடத்தில் இப்போது நாகேஷ் நடிக்கிறார்.

விருமாண்டியில் வன்முறை திணிக்கப்பட்டதாக இருந்தது. ஏன் அப்படி?

பத்திரிகைகளில் எதை நீங்கள் ஹைலைட் செய்கிறீர்கள். கொலை, வெடிகுண்டு விபத்து, காஷ்மீரில் நடக்கும் தீவிரவாதம் இதைத் தானே.

படத்தில் யதார்த்தம் சொல்ல வருகிறேன். வன்முறை கூட அதில் ஒரு பகுதி. மகாநதி பார்த்துவிட்டு ஒருவர் கேட்டார், தனது கையையே யாராவது வெட்டிக் கொள்வார்களா? என்று. ஏன் வெட்டிக் கொள்ள மாட்டார். என் ஊருக்கு வாங்க. நான் காட்டுகிறேன்.. தன் கையை வெட்டி அந்தக் கையை மறு கையில் எடுத்துக் கொண்டு பிறரை அடித்தவன் இருக்கிறான்.

மகாநதி, அன்பே சிவம் போன்ற வித்தியாசமான படங்களுக்கிடையே தெனாலி, வசூல்ராஜா போன்ற படங்களையும் செய்கிறீர்கள். வசூல்ராஜா போன்ற படங்களை நீங்கள் அதிகம் செய்துவிட்டீர்கள். புதுமையை கமலிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கும்போது பழமையை செய்வதேன்?

தெனாலி போன்ற படங்களை மக்கள் என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் முதலில் முழுமையாக மாறட்டும். அவர்களது ரசனை மாறட்டும். என்னை மட்டும் ஏன் காட்டில் மகரிஷியாக வாழச் சொல்கிறீர்கள்.

நல்ல விஷயங்களைக் கூறுவதற்காக தாங்கள் படம் எடுப்பதில்லை. படத்தின் மூலம் கருத்து சொல்வது என்பதெல்லாம் பொய் என சில இயக்குநர்கள் கூறுவது பற்றி?

நான் கூட எதற்காக நாம் வோட்டுப் போட வேண்டும் என நினைத்தேன். இதனால் நமக்கு என்ன பயன் என யோசித்ததுண்டு. இரு கட்சிக்கு கூட வோட்டு மூலம் வாக்குகள் கிடைத்தன என கட்சிகள் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதுண்டு. பதிவான வாக்குகளில் 10 சதவீதம் கள்ள வோட்டுகள் போடப்படுகின்றன எனச் சொல்வதுண்டு. அது எல்லாம் என்னைப் பாதித்தது.

நாங்க மெசேஜ் கூற மாட்டோம் என்கிறவர்கள் கூட ஒரு மெசேஜ் சொல்கிறார்கள். அதாவது இந்த சமூகத்தில் நமக்களுக்கு எந்த பொறுப்பும் இல்லை என்பதுதானே அது.

நடிப்பால் உலகை ஆச்சரியப்படுத்தியவர் நீங்கள். தற்போது இருப்பவர்களில் நீங்கள் பார்த்து ஆச்சரியப்படும் நடிகர் யார்?

சிவாஜி. அவர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். விவேக் குமார், நாகேஷ். இவர்களும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியவர்கள்.

அடுத்து என்ன படம் செய்யப் போகிறீர்கள்?

சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் தமிழ், தெலுங்கு இரண்டு மொழியிலும் ஒரு படம் நடிக்க இருக்கிறேன். இதில் நடிக்க மாதுரி தீக்ஷித்தும் கேட்டேன். பிறகு எனது கால்ஷீட்டை வசூல்ராஜாவுக்கு அளித்துவிட்டதால் மாதுரி அந்தப் படத்தில் நடிக்க முடியாது ஒழிந்தது. நான் என்றொரு தலைப்பில் ஒரு கதை இருக்கிறது. அதிலும் செய்ய வேண்டும். அந்தப் படம் விஞ்ஞானமாக இருக்கும். முழுக்க முழுக்க குழந்தைகளுக்காக ஒரு படம் செய்யும் ஐடியாவும் இருக்கிறது.

சினிமா

ஆய்த எழுத்து

அந்த மோசமான அரசியல்வாதி யார்?

தமிழ் சினிமாவின் மகாக்களில் ஒருவராகக் கூறப்படும் மணிரத்னம் 'ஆய்த எழுத்து' என்ற தனது உற்பத்தியை இப்போது சந்தைக்கு விட்டிருக்கிறார். அதில்தான் இந்த செல்வநாயகம் என்கிற ஒரு அரசியல்வாதி வருகிறார். ஆய்த எழுத்தின் மோசமான அரசியல்வாதி செல்வநாயகம் யார்? என்ற கேள்வி பலரிடையேயும் எழுந்துள்ளது.

மணிரத்னம் நல்ல சினிமா இயக்குனர் என்பதற்கும் மேலாக, ஒரு சிறந்த தமிழ்த் தேசிய எதிர்ப்பு கருத்தாளர் என்பதை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். இதனை இவர் வெளியிட்ட 'இருவர்' உள்ளிட்ட அனைத்துப் படங்களும் இதையே பறைசாற்றி நிற்கின்றன. குறிப்பாக தமிழக தமிழர்களின் தமிழுணர்வை சிதைப்பதற்கே, நையாண்டி செய்வதற்கே மணிரத்னம் தனது படங்களைப் பயன்படுத்தி வந்தார்.

மறுபக்கம் ஈழத்தமிழரைக் காட்டி ஈழத்தமிழரிடம் வணிகம் செய்ய மணிரத்னம் உற்பத்தி செய்த 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் ஈழத்தமிழரின் போராட்டத்தைக் கூறுவதாக வெளிக்கிட்டு அவரின் ஈழத்தமிழர் எதிர்க்கருத்தே அதில் வெளிப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக 'ஆய்த எழுத்து' மணிரத்னத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கதை இதுதான் ஒரு அடிதடிக்காரன் (ரவுடி) அது நடிகர் மாதவன். அவர் அரசியல்வாதி செல்வநாயகத்துக்காக (இயக்குனர் பாரதிராசா) அடிதடி செய்கிறார். செல்வநாயகத்திற்கு எதிராக கிளம்பும் பல்கலைக்கழக மாணவன் மைக்கேல் (சூர்யா) மற்றும் அவரின் கூட்டணியை ஒழிக்க முயலுகிறார். இதில் விபத்தாக மூன்றாவது நபர் (சித்தார்த்) நுழைகிறார். கடைசியில் செல்வநாயகத்துக்கு எதிராக தேர்தலில் மைக்கல் தலைமையிலான இளைஞர்கள் புரட்சிகர சிந்தனையுடன் வெற்றிபெற்று சட்டசபை செல்கின்றனர். புது தலைமுறை நேர்மையுடன் அரசியலில் நுழைவதுதான் படம்.

படத்தில் ஒரு முக்கிய காட்சி மைக்கல் மாதவனால் சுடப்படும் காட்சி. அதில் சித்தார்த் மைக்கலைக் காப்பாற்றுவது படத்தின் முக்கால் பங்கு காட்சி இது. ஒரே காட்சி மாதவன் பார்வையில் (POINT OF VIEW) FLASH BACK சூர்யா பார்வையில் FLASH BACK சித்தார்த் பார்வையில் ஒரு FLASH BACK என ஆய்த எழுத்தில் மூவரிடம் ஒரு காட்சியை மணிரத்னம் FLASH BACK க்குகளாகக் காட்டியுள்ளார்.

ஆனால் ஆய்த எழுத்தின் வில்லனாக வருகிற பாத்திரத்திற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் செல்வநாயகம். தமிழகபாரம்பரியத்தில் செல்வநாயகம் என்ற பெயர் யாருக்கும் சூட்டப்படுவதாக நாம் அறிந்ததில்லை. எனவே தங்கள் மத்தியில் வழக்கிலில்லாத ஆனால், ஈழத்தமிழர்களின் புகழ்பூத்த அரசியற் தலைவரின் பெயரை மணிரத்னம் திட்டமிட்டே பயன்படுத்தியுள்ளாரா என்ற கேள்வி ஈழத் தமிழரிடையே எழுவது தவிர்க்க முடியாதது.

ஈழத்தமிழர்களின் சாத்வீக போராட்டத்தின் தந்தையாக இருந்தவர் S.J.V. செல்வநாயகம். தமிழகத்தில் ஈ.வெ.ரா. பெரியார் தமிழக மக்களால் உரிமையுடன் 'தந்தை பெரியார்' என அழைக்கப்பட்டது போன்றே, ஈழத்தில் S.J.V. செல்வநாயகம் ஈழத்தமிழர்களால் உரிமையுடன் `தந்தை செல்வா' என அழைக்கப்பட்டார்.

'இருவர்' என்ற திரைப்படத்தில் தந்தை பெரியாரை "கொச்சைப்படுத்திய மணிரத்னம், ஆய்த எழுத்தில் ஈழத்தின் அறவழிப் போராட்ட நாயகனான தந்தை செல்வாவை கொச்சைப்படுத்துகிறாரா என்ற கேள்வியை ஈழத்தமிழன் கேட்கத் தோன்றுகின்றான். தமிழக சினிமா ஈழத்தமிழனை வைத்து பிழைத்து வருகின்ற இன்றைய நிலையில், ஈழத் தமிழனையே தொடர்ந்து கொச்சைப்படுத்தும் இவ்வாறான பாங்கு அனுமதிக்கப்படலாமா என்பதே இப்போது ஈழத்தமிழன் ஒவ்வொருவனின் கேள்வியாகவுமுள்ளது.

ஒரு சில நல்ல திரைப்படங்களான நந்தா, காற்றுக்கென்ன வேலி போன்ற வற்றைத் தவிர, மிகுதியானவற்றில் ஈழத் தமிழர்களை எள்ளிநகையாடும்பாத்திரங்களே படைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, புன்னகை மன்னன், தெனாலி, நளதமயந்தி, கன்னதில் முத்தமிட்டால் போன்றவற்றை ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடும் திரைப்படங்களாகச் சுட்டிக்காட்டலாம்.

இன்று தங்களது படத்தின் பொருளாதார ரீதியான வெற்றிக்கு புலம்பெயர்ந்து ஈழத் தமிழர்கள் வாழும் மேற்குலக நாடுகளின் திரையரங்குகளையே நம்பியிருக்கிற தமிழக சினிமாவின் முக்கியமானவர்கள் அதே ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடுவதையும் தமது வாடிக்கையாகக் கொண்டிருக் கிறார்கள். இதிலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாடுகளிலேயே, ஈழத்தமிழர்களின் துணையோடு வெளிநாட்டுப் படப்பிடிப்புக்களைச் செலவுச் சிக்கனத்தோடு மேற்கொள்ளும் தமிழக சினிமாவின் தமிழ்த் தேசிய எதிர்ப்பு முதலாளிகள், நடிகர்கள் மறுபுறத்தே ஈழத்தமிழர்களையே பதம்பார்த்து வருகிறார்கள்.

'ஆய்த எழுத்து' செல்வநாயகம் மூலம் ஈழத்தமிழரால் அதிகம் உச்சரிக்கப்பட்ட அறவழிப் போராட்ட அரசியற் தலைவரான தந்தை செல்வா என்ற S.J.V. செல்வநாயகம் பற்றிய விம்பத்தை சிதைப்பதாக சூட்டப்பட்ட பெயர் இல்லையென்பதை மணிரத்னம் மறுத்துரைப்பாரா? ஈழத்தமிழர்களின் மன உணர்வுகளை, போராடும் குணத்தை அறிந்த மணிரத்னத்துக்கு, ஏன் ஒரு தமிழக அரசியல்வாதியின் பெயரை சூட்ட முடியாமல் அல்லது மனமில்லாமல் போனது?

இதற்கான பதிலை மணிரத்னம் தரப்போவதில்லை. இவ்வாறானவற்றிற்கான பழியை வசனகர்த்தா சுஜாதா (ரங்கராஜன்) மீது போட்டுத் தப்பிக்க முயற்சிக்கலாம். ஆனால் மணிரத்னத்திற்கான பதிலை, தமிழக சினிமாக்காரர்களிற்கான பதிலைத் தருவதற்கு ஈழத்தமிழர்கள் தயாராகவே உள்ளனர். இனிமேலும் இவ்வாறான நிகழ்வுகள் தமிழக சினிமாக்களிலே இடம்பெற்றால் அத் திரைப்படங்களை மேற்குலகில் பகிஷ்கரிப்பதற்கும், திரைப்பட நட்சத்திரங்கள் 'காசு பார்க்கும்' நட்சத்திர இரவுகளைப் புறக்கணிப்பதற்கும் ஈழத்தமிழர்களை மணிரத்னம் தயாராக்கி விட்டுள்ளார்.

எனவே மணிரத்னம் ஈழத்தமிழனிற்கு தீமை செய்யப் போய், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடையே தமிழக சினிமா குறித்த வெறுப்பை மேலும் தீவிரப்படுத்தி ஒட்டுமொத்த தமிழக சினிமாவையும் வெறுப்புடன் ஈழத்தமிழன் நோக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

தமிழக சினிமா உலகம் இதுபற்றிச் சிந்திக்குமா?

– தாயகத்திலிருந்து
உணர்வுள்ள தமிழன்.

ஜோர்



- விமர்சனம்

ஸ்டூடண்ட் நெ. 1 படத்துக்குப் பின் செல்வா இயக்கத்தில் சிபிராஜ் நடித்திருக்கும் படம் 'ஜோர்'. சிபியுடன் தந்தை சத்யராஜும் நடித்திருக்கிறார். தந்தையாகவே.

கிராமத்தில் தியேட்டர் ஒன்றையும் பள்ளிக்கூடம் ஒன்றையும் நடத்தி வருகிறார் சத்யராஜ். மகன் சிபி, கல்லூரியில் படித்துக் கொண்டு ஜாலியாக ஊர் சுற்றுகிறார். அந்த ஊர் எம்எல்ஏ கோட்டா சீனிவாசனுடன் தந்தையும் மகனும் மோதுகிறார்கள். படத்தில் இந்தக் காட்சி வரும்போதே இனி என்ன? என்பதை ரசிகர்கள் ஊகித்துவிடுகிறார்கள்.

சிபி, தந்தையுடன் லூட்டியடிப்பதாகக் காட்டப்படும் காட்சிகள் ஒரு படத்தையும், கல்லூரியில் அவர் காதல் - மோதல் என ஈடுபடும் காட்சிகள் இன்னொரு படத்தையும் பார்ப்பதுபோன்று ஏற்படும் உணர்வு, தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. தெளிவில்லாத ஸ்கிரிப்ட், குழப்பமான திரைக்கதை என ரசிகர்களை வாட்டி வதைத்துள்ளனர்.

பழைய ஹீரோயின் ரதி போன்ற சாயலில் இருக்கும் கஜாலா, "உனக்கு ஓடும் அதே ரௌடி ரத்தம்தான் எனக்குள்ளும் ஓடுது" என ரமணாவை கத்தி காட்டி மிரட்டுகி றாரே... அட கஜாலாவுக்கும் நடிப்பு வருகிறது! ஆனால் கஜாலாவை கரம் மசாலாவாகவே (கவர்ச்சிக்கு) பயன்படுத்த முயற்சித் திருக்கிறார் செல்வா.

ஹீரோவுடன் தனியாக சண்டைபோட்டு ஜெயித்துக் காட்டினால் நீ சொல்பவனை நான் திருமணம் செய்து கொள்கிறேன்' என வில்லனைப் பார்த்து கஜாலா சொல்கிறார். "ரன்" படத்தில் கேட்கத் தொடங்கிய இந்த வசனத்தை, இன்னும் எத்தனைப் படங்களில் கேட்கப் போகிறோமோ?

வடிவேலுவைப் பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். இவரும் ஷர்மிளியும் வரும் காட்சிகளில் இரட்டை அர்த்த வசனங்களைவிட ஒருபடி மேலே சென்று கொச்சைத்தனமான வசனங்கள் படத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இது போன்ற வசனங்களை திணித்துவிட்டு, இது குடும்பப் படம் என விளம்பரப்படுத்துவதுதான் அபத்தம்.

"சாமி" வேடத்தை (நடிப்பையும்) அப்படியே இதிலும் "ரிபிட்" செய்திருக்கிறார் கோட்டா சீனிவாசராவ்.

அடிக்கடி "கடி" ஜோக்குகளை கூறும் பானுப்பிரியா, படத்தின் மிகப்பெரிய "கடி". சத்யராஜ், சிபிராஜ் பாத்திரப் படைப்பு போல, இவரது கேரக்டரும் பலவீனமாகப் படைக்கப்பட்டுள்ளது.

"ஐ லவ் யூ" என்ற பாடலுக்கு மட்டும் தேவா நல்ல மூடில் மெட்டு அமைத்திருக்கிறார் போலும். "மம்மி செல்லமா" பாடல் மெட்டு, பணக்காரனில் வரும் "நூறு வருஷம் இந்த மாப்பிள்ளையும் பொண்ணும்தான்" பாடலை நினைவுபடுத்துகிறது.

மூன்று மணி நேரம் "போர்" அடிக்காமல் இருக்க "ஜோர்" பார்க்கலாம் என நம்பி வரும் ரசிகர்களுக்கு "அல்வா" கொடுத்திருக்கிறார் செல்வா.

සිගිරි
சீகிரி
SIGIRI

தரத்தின் சின்னம்
SIGIRI இப்போது
12 நாடுகளில்
கிடைக்கிறது

மலிவான விலை - தெளிவான ஒலி - தரமான சேவை

தாயக உறவுகளுடன் தரமாக உரையாட ஒரு நிறைவான சேவை

SRI LANKA TELECOM இன் SIGIRI உங்கள் தேவை

£5 FREE

open a new home account with £25
and get £5 FREE

enjoy
home comforts
with a **Sigiri*Home*** account
from Sri Lanka Telecom

සිගිරි
சீகிரி
SIGIRI

සිගිරි
சீகிரி
SIGIRI

call our hotline 24hrs on

0207 094 9494

0800 485 1010

best prices - best connections - best quality

visit www.sigiri.net

Kensal Rise
Movie Makers

EASTHAM	SYDENHAM	TOOTING	SOUTH HARROW
03 - July சனி 14:30 03 - July சனி 18:30	10 - July சனி 19:00	11 - July ஞாயிறு 14:30 11 - July ஞாயிறு 18:30	17 - July சனி 14:30 17 - July சனி 18:30
Krishjan Social Club Southend Road Eastham	Sydenham School Dartmouth Road Forest Hill	Amman Kovil Wedding Hall 181-186 Upper Tooting Road	Welldon Park Middle School Wyvenhoe Road, South Harrow

Produced by
Sriskanthan

Contact Details:

Suresh - Sasi: **020 8248 7901**

Jasmine: **020 8640 4604**

Jayaram: **07958 618 989**

Sris: **07870 106 335**

Suresh Krishna as

சூர்யா

Surya

Lyrics
Pa.Vijay
Music
Ravi Devendran

Screen play - Dialogue - Direction: S.Bala